


කල්මුනෛ NET
kalmunainet.com
உண்மையின் முகம்
e-Paper
පරිමානම්
Parimanam

# பரிமாணம்

தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்

இதழ்: 19 | சுபகிருது வருடம் மாசி 16 | 2023 பெப்ரவரி 28 செவ்வாய்க்கிழமை | 20 பக்கங்கள் | விலை 70/-



## பாராளுமன்றம் நகைச்சுவை மன்றமானது

02

# இன்று நாடு தழுவிய வேலை நிறுத்தம்

## முக்கிய சேவைகள் முடங்கும் அபாயம்

03



## இந்திய சினிமாவில் ஈழத்து கலைஞன் பாரதி மைந்தன்

11



05

## வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கு ஒரே உதவும் கரம் IMF



## தமிழர்களின் இருப்பை வெளிப்படுத்தும் பெயர் 'மொறட்டுவை'

12



# பாராளுமன்றம்

## நகைச்சுவை மன்றமானது

✍ க. குணராசா


pix by Duminda UGN

உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்படுமா? அல்லது ஒத்தி வைக்கப்படுமா? இன்னும் புரியாத புதிராகவே தொடர் கிறது.

நாடு குழம்பிப் போய் கிடக்கிறது. தேர்தல் ஒன்றை எதிர்பார்த்த நிலையில், ஆட்சித் தலைமையும் அதிகாரி களும் தேர்தல் ஆணைக்குழுவும் செயல்படும் விதம், நாட்டை நகைப்புக்கு இடமாக மாற்றி இருக்கிறது.

அறிவிக்கப்படாத தேர்தலை எவ்வாறு ஒத்தி வைக்க முடியும்...? என்று கேட்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க. மார்ச் ஒன்பதாம் தேதி தேர்தல் நடத்தப்படும் என்று கூறியது தேர்தல்கள் ஆணைக்குழு. தேர்தல் நடத்து வதற்கு காசு தர முடியாது என்கிறது திறைசேரி. பணம் வழங்கப்பட்டால் மட்டுமே வாக்குச்சீட்டை அச்சிட முடியுமென கை விரிக்கிறார் அச்சக கூட்டு தாபன தலைவர் கன்ங்கானி லியனகே.

இந்த நிலையில், உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்படுமா? அல்லது ஒத்திவைக்கப்படுமா? இந்த சந்தேகத்தை பாராளுமன்றத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாகவே கேட்டனர்.

அதற்கு அவர் அளித்த பதில், நாட்டு மக்களை மாத்திரம் அல்ல, உலகத்தையே வியப் பில் ஆழ்த்தியது. "அறிவிக் கப்படாத தேர்தல் ஒன்றை எவ்வாறு ஒத்தி வைக்க முடியும்...?" என ஜனாதிபதி சபையிலே கேள்வி எழுப்பினார்.

**ஆணைக்குழு புதிய திகதியை அறிவித்தாலும் நிதி வழங்குவது யார்....???**

இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவரிடம் இருந்து நாட்டு மக்கள் இத்தகைய பதிலொன்றை எதிர்பார்க்கவில்லை.

கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றம் நடந்து கொண்டிருந்த பொழுது, திடீரென சபைக்குள் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டு நிலைமைகள் தொடர்பாக உரையாற்ற தொடங்கினார்.

**நிறைவேற்று அதிகாரத்தை விஞ்சும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இல்லை**

"நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருக்கின்ற நிலையில், அத்தியாவசிய தேவைகளை தவிர வேறெந்த விடயங்களுக்கும் நிதிகளை வழங்க முடியாத நிலை இருக்கிறது. தேர்தல் நடத்துவதற்கு எங்களிடம் நிதி இல்லை..." என ஜனாதிபதி தனது உரையின் போது சுட்டிக் காட்டினார்.

இந்த வேளையில், கொதித்தெழுந்த எதிர்க்கட்சி தரப்பு, தேர்தல் ஒத்திவைக்கப்படுமா? நடத்தப்படுமா? என ஆவேசமாக ஜனாதிபதியிடம் கேட்டனர். "தேர்தல் நடத்து வதற்கு நிதியும் இல்லை; தேர்தலும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. தேர்தல் இருந்தாலும் நடத்து வதற்கு பணம் இல்லை...." இது ஜனாதிபதியின் பதில்.

மிகவும் எதிர்பார்ப்பு மிகுந்த இந்த அறிவிப்பை, அவர் சபையில் சொல்லிய விதம் ஒரு கோமாளித்தனமாகவே இருந்தது.

தேர்தல் மார்ச் மாதம் ஒன்பதாம் திகதி நடத்தப்படும் என தேர்தல் ஆணைக்குழு ஏற்கனவே, உத்தியோபூர்வமாக அறிவித்திருந்தது. அதனை அதிகாரப்பூர்வமான அறிவிப்பாக தன்னால் கருத முடியாது என்று அவர் கூறினார்.

ஐந்து பேரை அங்கத்தவராக கொண்ட தேர்தல் ஆணைக் குழுவின் ஏகோபித்த முடிவாக இந்த அறிவிப்பை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆணைக் குழுவில் உள்ள இரண்டு பேர் எடுத்த தீர்மானத்தை, ஏனைய மூவர் ஆமோதித்து இருக்கிறார்கள்.

"தேர்தல் நடத்த வேண்டும் என்ற தீர்மானத்தை ஐந்து பேரும் சேர்ந்து எடுக்க வேண் டும். அதுதான் ஆணை குழுவின் ஒருமித்த கருத்தாக அமையும். ஆகவே, தேர்தல் ஆணைக்குழுவில் உள்ள இருவர் எடுத்த தீர்மானத்தை உத்தியோக பூர்வ முடிவாக ஏற்றுக் கொள்ள முடியாது" என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதியினுடைய இந்த கருத்தால், பாராளுமன்ற சபா மண்டபத்தினுள் குழப்ப நிலை ஏற்பட்டது. எதிர்க்கட்சி தரப்பில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், கோஷங்களை எழுப்பியவாறு சபைக்கு நடுவில் வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த வேளையில், ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர்... ஜனாதிபதியை சபைக்கு வெளியில் அழைத்துச் சென்றனர்.

உண்மையில், ஜனாதிபதி சபையினுள் நடந்து கொண்ட விதத்தை, சகல அரசியல் தரப்புகளும் விமர்சன கண்ணோட்டத்து டனேயே நோக்குகின்றன.

சர்ச்சைக்குரிய ஒரு தேசிய பிரச்சி னை தொடர்பில் விளக்கமளிக்கின்ற பொழுது, இருதரப்புக்கும் விளக்கம் அளித்திருக்கலாம். இதை விடுத்து அவர் நடந்து கொண்ட விதம், ஒரு கோமாளித்தனமாகவே தெரிந்தது.

ஜனாதிபதிக்குரிய ஆசனத்தில் எழுந்து நின்று உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கிட்ட த்தட்ட 180 பாகை சுழன்று சுழன்று, வேடிக்கை தொனியில் விளக்கமளித்துக் கொண்டே இருந்தார். எதிர்க்கட்சி கள் கேள்வி எழுப்பிய போதெல்லாம் நகைச்சுவை தொனியில் அவர் கூறிய விடயங்கள், நாட்டு மக்களும் நகைச்சுவையோடு தான் பார்த்தார்கள்.

எதிர்க்கட்சியில் இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், ஜனாதிபதியின் கருத்துக்கு எதிரான கருத்தை சுட்டிக்காட்டவிளைந்த பொழுது, எழுந்தமானமாக தட்டிக் கழித்தார்.

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்...

பரிமாணம் கல்முனை NET Parimanam
பரிமாணம்
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
எல்லை வீதி, கல்முனை 01.
kalmunainet@gmail.com | +94762933026 | +94773457915

# வதைக்கும் மின் பூதம்

வாழ்வா...? சாவா...? இந்த எல்லையில் தான் நாடு நிற்கிறது. சுமைக்கு மேல் சுமை. வாழ்க்கைச் செலவை ஈடு செய்ய முடியாமல் அழுத்தத்தின் உச்சியில் மக்கள்.. வருவாய் இல்லாமல் வரி கட்டும் பரிதாப நிலை...

இலங்கையின் நெருக்கடி நிலையின் வெளிப்பாடுகள் இவை.

சமையல் எரிவாயு, எரிபொருள் விலைகளும் வரிகளும் அதிகரிக்கப்பட்டு மூச்சு விடுவதற்கு அவதிப்படும் நேரத்தில் அரசு ஈவிரக்கம் இன்றி செய்யும் நடவடிக்கை கள், எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கி இருக்கிறது.

ஒரு நேர உணவுக்கே திண்டாடும், பரிதாப நிலை தொடரும் போது, பூதம் ஒன்று புறப்பட்டு வந்த கதையாக மின் கட்டண அதிகரிப்பும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மின்சார கட்டணம் 66% அதிகரிக்கப்படுவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அதிகரித்த கையோடு, மின் துண்டிப்பும் நிறுத்தப்பட்டு இருக்கிறது. கட்டண அதிகரிப்போடு தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப் படுகிறது என்றால், இவ்வளவு நாளும் தொடர்ந்த மின் துண்டிப்பின் பின்னணியை கொஞ்சம் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

சர்வதேச நாணய நிதியம் எதைச் சொல்கிறதோ அதைச் செய்வேன் என்று உறுதியாக இருக்கிறது இன்றைய தலைமை.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு சர்வதேச நாணய நிதியத்தை மாத்திரமே நம்பிக்கொண்டிருக் கிறது. வாங்கிய கடன்களை கட்டுவதற்கு, ஏதாவது செய்தால் மாத்திரமே கடன் வழங்குவதற்கான நடவடிக் கைகளில் ஈடுபட முடியும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துவிட்டது. இது கடன் மறு சீரமைப்பு என்ற பெயரில் கடன் வழங்கும் நாடுகளுடன் பேச்சு வார்த்தை முன்னெடுப்புக்கான நடவடிக்கை.

இலங்கை மீது நம்பிக்கை இழந்த நிலையில் தான் நாணய நிதியம் கடன் வழங்குவதற்கு யோசிக்கிறது. அடிப்படையில் இலங்கை சொந்த காலில் நிற்காத நாடு. எதிலும் ஊழல், மோசடி மலிந்த நாடு. இவைகளை விட, அரசியல் நலம் சார்ந்த இலவசங்களாலும் மானியங் களாலும் மக்களை தவறாக பயன்படுத்தி இருக்கும் நாடு....

இவைகளில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியம் 15 நிபந்தனைகளை இலங்கைக்கு விதித் திருக்கிறது. அரச நிறுவனங்களுக்கு திறைசேரியில் இருந்து மானியங்கள் வழங்குவது நிறுத்தப்பட வேண்டும் என்பது முக்கியமான நிபந்தனை.

இந்தப் பதினைந்து நிபந்தனைகளும், வழங்கிய கால அவகாசத்திற்குள் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அல்லது வரிச் சுமைகளாக மக்கள் மீது சுமத்தப்பட்டு இருக்கிறது என்றும் சொல்லலாம். 15 நிபந்தனைகளில் 14 ஐ ஓரளவு நிறைவேற்றிய இந்த அரசாங்கம், பதினைந்தாவது நிபந்தனையை நிறைவேற்றுவதில் கொஞ்சம் தடை களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதற்காக, மின் கட்டண வரியை அதிகரிக்க வேண்டும் என்ற நிபந்தனை நாட்டில் பாரிய குழப்ப நிலையை ஏற்படுத் தியது. என்றாலும், சர்வதேச நாணயத்தின் அழுத்தம், மின் கட்டண அதிகரிப்பை மக்கள் மீது திணிக்க வேண்டிய நிலைக்கு அரசு நிர்பந்திக்கப்பட்டது. நிபந்தனைகளுக்குள் கட்டுப்பட்ட இந்த அரசு,

பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவோம் என்று கூறுவதெல்லாம், ஒருவகையான பம்மாத்து என்று சொல்ல முடியும்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்...

# இன்று நாடு தழுவிய வேலை நிறுத்தம்

## முக்கிய சேவைகள் முடங்கும் அபாயம்

துறைமுகம், வங்கிகள், ஆசிரியர்கள், அரச, அரை அரச மற்றும் தனியார் துறைகளில் உள்ள பல சேவைகள் இன்று மார்ச் 1ஆம் திகதி வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக ஒன்றிணைந்த தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

நாடு தழுவிய வேலைநிறுத்தம், கடிதப் பணி, கண்டன ஊர்வலம், கறுப்பு ஆடை அணிதல் போன்ற போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு;

- வங்கி வட்டியை குறைக்கவும்
- மின்சாரம், தண்ணீர் மற்றும் எரிபொருள் விலையை குறைக்க வேண்டும்
- மக்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்குங்கள்
- குறைந்த நியாயமற்ற வரிகள்
- ஓய்வூதிய தாமதத்தை முடிவுக்கு கொண்டு வரவும்
- அரசு சொத்துக்களை விற்பதை நிறுத்துங்கள்
- வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக ரூ.25,000 வழங்கவும்
- தட்டுப்பாடு இல்லாமல் மருந்துகளை வழங்குங்கள்
- சமூர்த்தி வெட்டுக்களை நிறுத்துங்கள்

இதேவேளை, துறைமுகங்கள், விமான நிலையங்கள் மற்றும் பயணிகள் போக்கு வரத்து சேவைகள் தொடர்பான

அறிவித்தலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ளார்.

எந்தவொரு துறைமுகத்திலும் உள்ள கப்பல்களில் இருந்து பயணிகள் அல்லது பொருட்கள்அல்லது உணவுமற்றும்பானங்கள் அல்லது நிலக்கரி, எண்ணெய், எரிபொருள் ஆகியவற்றை வெளியேற்றுதல், வண்டி ஏற்றுதல், ஏற்றுதல், சேமிப்பு, விநியோகம் மற்றும் இறக்குதல் ஆகியவற்றிற்கு பொது போக்குவரத்து சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக மாறியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

துறைமுகங்கள், எண்ணெய், மின்சாரம், வங்கிகள் போன்ற பல தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தின் வரிக் கொள்கைக்கு எதிரான போராட்டம் உட்பட பல பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு மார்ச் 1 ஆம் திகதி பாரிய ஒரு நாள் வேலைநிறுத்தத்தை அமுல்படுத்த தீர்மானித்ததன் பின்னணியில் இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

## அரசின் வரி விதிப்புக்கு எதிர்ப்பு கல்விச் சமூகம் கருப்பு போராட்டம்

கருப்பு போராட்டத்தை இன்று (01) முன்னெடுக்கவுள்ளதாக ஆசிரியர்களின் முதன்மை தொழிற்சங்க கூட்டணியின் தொழிற்சங்கத் தலைவர்களின் கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசெப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

குறித்த கலந்துரையாடலின் போது, மார்ச் 01 வேலை நிறுத்தம் நடத்த முன்மொழியப்பட்டதோடு, கருப்பு போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, அன்று பாடசாலைகளில் கறுப்பு ஆடைகளை அணிந்து அல்லது கறுப்பு துணிகளை கட்டிக் கொண்டு அதிபர், ஆசிரியர்கள் கடமையில் ஈடுபடுவார்கள் என தெரிவித்தார்.

போக்குவரத்து கொடுப்பனவை வழங்க ஆசிரியர்கள்-அதிபர்களுக்கு அதிகாரம் வழங்குதல், வங்கி வட்டியை உயர்த்துவதற்கும் வரி விதிப்பதற்கும் எதிராக, தேர்தலை ஒத்திவைத்து அடக்குமுறைக்கு எதிராக இந்த போராட்டம் நடத்தப்படவுள்ளது.

## பாராளுமன்றத்தை கூட்டுமாறு சபாநாயகரிடம் வேண்டுகோள்

தேர்தலுக்கான நிதியை வழங்குகின்றமை தொடர்பாக சபாநாயகருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அனுப்பியுள்ள கடிதம் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து, எதிர்க்கட்சித் தலைவர் தலைமையிலான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குழு சபாநாயகருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளது. பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அனுப்பப்பட்டுள்ள கடிதம் தொடர்பில் ஆராய்வதற்காக நிதி அமைச்சின் செயலாளரை பாராளுமன்றத்திற்கு அழைக்குமாறு சபாநாயகரிடம் எதிர்க்கட்சித் தலைவர் தலைமையிலான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த விடயம் குறித்து விவாதிப்பதற்காக உடனடியாக பாராளுமன்றத்தை கூட்டுமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## வாக்குச்சீட்டு: சகல வசதிகளும் செய்து கொடுத்தால் 25 -30 நாட்களுக்குள் அச்சிட முடியும் - அச்சகர்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளன.

தேர்தலை நடத்தும் திகதி தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமை மற்றும் வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கு தேவையான வசதிகள் கிடைக்காத காரணத்தினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில். இதுவரை அச்சிடப்பட்ட வாக்குச்சீட்டுகள் மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாக அரச அச்சம் குறிப்பிட்டுள்ளது.

தேர்லுக்கான வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கு தேவையான பொலிஸ் பாதுகாப்பு கிடைக்காமை, வாக்குச்சீட்டு அச்சிடுவதற்கு தேவையான பணம் கிடைக்காமை போன்ற காரணிகளால், அண்மை நாட்களில் வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகளுக்கு பாரிய தடை ஏற்பட்டிருந்தது.

தேவையான அனைத்து வசதிகளும் கிடைக்குமாயின் 25 முதல் 30 நாட்களுக்குள் அனைத்து வாக்குச்சீட்டுகளையும் அச்சடிக்கும் இயலுமை தமது நிறுவனத்திற்கு உள்ளதாக அரச அச்சகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.




## வதைக்கும் மின் பூதம் (ஆசிரியர்த் தலைப்பு...)

திறைசேரி நிதியை வழங்காவிட்டால், மானியங்களும் சலுகைகளும் சாத்தியம் இல்லை என்பது யதார்த்தம். ஆகவே, அதிகரித்திருக்கும் மின்சார கட்டணம் என்பது மக்கள் மத்தியிலே ஊடுருவி இருக்கும் பூதமாகவே பார்க்க முடிகிறது.

அவனின்றி அணுவும் அசையாது என்பது போல், மின்சாரம் இன்றி எதுவும் செய்ய முடியாது என்பதுதான் இன்றைய நவீனம். ஏற்கனவே வரி அதிகரிப்புகளாலும் விலை அதிகரிப்புகளாலும் துவண்டு போயிருக்கும் மக்களுக்கு, மின் கட்டண அதிகரிப்பு என்பது, சகல துறைகளிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த இடத்தில், அரசுக்கு நாம் ஒரு ஆலோசனையை முன் வைக்கிறோம். மானியங்கள் வழங்குகிறீர்களோ இல்லையோ... மின்சார கட்டணத்தை மீளாய்வு செய்ய வேண்டும். தவறினால் மக்கள் சுய கௌரவம் இழந்து வீதியில் நின்று கையேந்தும் நிலை ஏற்படுவதை தவிர்க்க முடியாது.

கொழும்பு கண்டி, போன்ற நகரங்களில் இப்போதும் இந்த நிலை உருவாகிவிட்டது. சிற்றுண்டி கடைகளுக்கும் ஹோட்டல்களுக்கும் செல்ல முடியவில்லை.

பல பக்கங்களிலும் இருந்து கைகள் நீட்டப்படுகின்றன. பசிக் கொடுமையை தீர்க்க ஏதாவது செய்யுங்கள் என்பது தான் அவர்களது வேண்டுகோளாக இருக்கின்றது.

இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளின் விலைகள் முப்பது ரூபாவாக வரையறுக்கப்பட்டு இருக்கிறது. என்றாலும், கேக் உள்ளிட்ட பொருட்களின் விலைகளை குறைக்க முடியாதென பேக்கரி உரிமையாளர்கள் கூறியுள்ளதையும் ஜனாதிபதி கவனத்தில் கொள்ள வேண்டும்.

அவர்கள் கூறுகின்ற காரணம் எல்லாம் மின்கட்டண அதிகரிப்பு. பேக்கரிகள் எல்லாம் போரணைகளாக விறகு வைத்து எரிக்கப்பட்ட காலம் மலையேறி விட்டது. இப்போது, வெதுப்பக உற்பத்திகள் எல்லாம் மின் அவன்களுக்கு மாறிவிட்டன.

ஆகவே, மின் கட்டண அதிகரிப்பு, சகல மட்டங்களிலும் மக்களை தாக்கி அளிக்கும் என்பதை, அரசும் கழுத்துப்பட்டியுடன் ஆலோசனை வழங்குபவர்களும், புரிந்து கொள்ள வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நிபந்தனைகளை, அடிச்சுவடியாகப் பின்பற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சிற்றுண்டிகள் கூட வாங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் ஏழை, எளிய மக்களின் எரியும் வயிற்றுக்கு நிவாரணம் கொடுப்பாரா? அல்லது மின் கட்டணத்தை மறுசீரமைப்பாரா...?

## அமைச்சர் அலி சப்ரி இந்தியா பயணம்



புதுடில்லியில் நடைபெறவுள்ள புவிசார் அரசியல் மற்றும் புவி-பொருளாதாரம் தொடர்பான இந்தியாவின் முதன்மை மாநாடான ரைசினா உரையாடலின் எட்டாவது பதிப்பில் கலந்துகொள்வதற்காக வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி 02-04 மார்ச்2023 வரை இந்தியாவிற்கு அதிகாரப்பூர்வ விஜயம் செய்ய உள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சகத்துடன் இணைந்து அப்சர்வர் ஆராய்ச்சி அறக்கட்டளை இந்த மாநாட்டை நடத்துகிறது.

மேற்கண்ட மாநாட்டின் போது 03 மார்ச் 2023 அன்று நடைபெறும் ''பிளவுபட்ட உலகத்தை குணப்படுத்துதல்'' மற்றும் ''பைட்ஸ் ஆஃப் பிராமிஸ்: தொழில்நுட்பம் எவ்வாறு சமூகங்களை உயர்த்துவது'' ஆகிய தலைப்புகளில் இரண்டு சிறப்பு குழு விவாதங்களில் அமைச்சர் பங்கேற்க உள்ளார்.

மாநாட்டின் பக்கவாட்டில், பரஸ்பர நன்மைபயக்கும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான புதிய வழிகளில் கவனம் செலுத்தும் இருதரப்பு கலந்துரையாடல்களுக்காக அமைச்சர் பல நாடுகளைச் சேர்ந்த தனது சகாக்களையும் சந்திப்பார்.

# தமிழரசு கட்சிக்கு மக்கள் மத்தியில் அதிகரித்துள்ள செல்வாக்கினை கண்டு ஜனாதிபதி அஞ்சுகின்றார்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அச்சத்தில் உள்ளார் என்பது அவர் வெளியிட்டுள்ள புதிய வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளிப்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.



திருகோணமலையில் இன்று (செவ்வாய் கிழமை) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட சந்திப்பு ஒன்றில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது குறித்த சந்திப்பில் பங்கேற்றிருந்த இலங்கை தமிழரசு கட்சியின் ஆதரவாளர்கள் மத்தியில் கருத்து வெளியிடும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத்தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளமைக்கான காரணம் தொடர்பிலும் இரா.சாணக்கியன் இதன்போது சில கருத்துக்களை பகிர்ந்திருந்தார்.

குறிப்பாக தெற்கில் தனக்கு மக்கள் பலம் இல்லை என்பதனையும், வடக்கு கிழக்கில் தமிழரசு கட்சிக்கு மக்கள் மத்தியில் அதிகரித்துள்ள செல்வாக்கினையும் கண்டு அஞ்சியே ஜனாதிபதி உள்ளூராட்சி மன்றத்தேர்தலினை ஒத்திவைக்க முற்படுகின்றார் என சந்தேகம் எழுந்துள்ளது எனவும் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக பல பகுதிகளில் மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட மீண்டும் ஆரம்பித்துள்ள நிலையில் அடந்த சில நாட்களுக்கு முன்னதாக மேற்கொள்ளப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் பிரதேச சபை உருப்பினர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருக்க குறித்த திகதியில் தேர்தலை நடத்துவதே சிறந்தது எனவும் இரா.சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.

# நாடு முழுவதும் உள்ள வங்கி சேவைகள் இன்று முடங்கும்?

நாடு தழுவிய ரீதியில் இன்றைய தினம் (மார்.01) முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கையில், ஏனைய வங்கிகளையும் இணைத்துக்கொள்ள கலந்துரையாடப்பட்டு வருவதாக இலங்கை வங்கி ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவர் ஷன்ன திஸாநாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடு முழுவதும் உள்ள வங்கி சேவைகள் நாளைய தினம் ஸ்தம்பிதமடையும் சாத்தியம் உள்ளதாகவும் அவர் கூறினார்.

அரசாங்கத்தின் முறையற்ற வரி வசூலிப்பிற்கு எதிராக நாளை முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு, ஏனைய அனைத்து துறையினரும் ஆதரவை வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# உள்ளூராட்சி தேர்தல்: புதிய திகதியிலும் சாத்தியம் இல்லை

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான புதிய திகதியை தீர்மானிப்பதற்கான கூட்டம் தேர்தல் ஆனைக்குழு அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

எதிர்வரும் மூன்றாம் திகதி நடைபெற உள்ள இந்த கூட்டத்தில் உள்ளூராட்சி தேர்தலுக்கான புதிய திகதி தீர்மானிக்கப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனைக்குழு தனக்குள்ள அதிகாரத்தை கொண்டு புதிய திகதியை தீர்மானித்தாலும், போதிய நிதி வழங்கப்படாவிட்டால் தேர்தலை நடத்த முடியாது.

மார்ச் ஒன்பதாம் திகதி தேர்தல் நடத்தப்படும் என தேர்தல் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், ஒன்பதாம் திகதி தேர்தல் நடைபெறாது என்று ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது.

அத்தியாவசிய சேவைகளை தவிர தேர்தலுக்கு நிதி வழங்க முடியாது என்று ஜனாதிபதியும் தெரிவித்திருந்தார். நிதி அமைச்சின் செயலாளர் தேர்தலுக்கு நிதி ஒதுக்கக்கூடிய நிலையில் நிதி நிலைமை இல்லை என்று கை விரித்தார். திறை சேரியின் செயலாளரும் தேர்தலுக்கு நிதி ஒதுக்கக் கூடிய வகையில் நிலைமை இல்லை என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், ஒன்பதாம் திகதி தேர்தல் நடத்த முடியாது என்று தேர்தல் ஆணைக்குழு தலைவர் அறிவித்தார்.

இந்த நிலையில் மூன்றாம் திகதி எடுக்கப்படுகின்ற தீர்மானம் தேர்தல் ஒன்றை நடத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்குமா என்பது சந்தேகமாகவே இருக்கிறது.

அரசாங்கத்தை மீறி தேர்தல் ஒன்றை நடத்துகின்ற பலம் தேர்தல் ஆணைக்குழு இடம் இல்லை. ஜனாதிபதி தனிப்பட்ட ரீதியில் இந்த தேர்தல் நடத்தப்படுவதை வெளிப்படையாகவே எதிர்த்து வருகின்றார். நிறைவேற்று அதிகாரத்தை மீறி செயல்படும் பலம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடையவே கிடையாது.

இந்த நிலையில் மிகக் குறுகிய காலத்தில் தேர்தல் நடத்தப்படும் சாத்தியம் இருக்காது என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

இதே வேளை, பாராளுமன்றத்தை அவசரமாக கூட்டுமாறு சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கான நிதியை வழங்குகின்றமை தொடர்பாக சபாநாயகருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அனுப்பியுள்ள கடிதம் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து, எதிர்க்கட்சித் தலைவர் தலைமையிலான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குழு சபாநாயகருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டது.. பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அனுப்பப்பட்டுள்ள கடிதம் தொடர்பில் ஆராய்வதற்காக நிதி அமைச்சின் செயலாளரை பாராளுமன்றத்திற்கு அழைக்குமாறு சபாநாயகரிடம் எதிர்க்கட்சித் தலைவர் தலைமையிலான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த விடயம் குறித்து விவாதிப்பதற்காக உடனடியாக பாராளுமன்றத்தை கூட்டுமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# பாடசாலை அதிபரை இடம் மாற்றாதே! கொட்டும் மழையில் சம்மாந்துறையில் போராட்டம்

**நூருல் ஹுதா உமர்**

சம்மாந்துறை கல்வி வலய சம்மாந்துறை கமு/சது/ஜமாலியா வித்தியாலயத்தின் அதிபர் எம்.எம். மஹிஷா பானு இடமாற்றம் செய்யப்பட்டதாக பரவிய செய்தியை அடுத்து பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள் இன்று (28) பாடசாலை முன்றலில் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

கடந்த காலங்களில் முறையான நிர்வாகமின்றி பல்வேறு அநாகரிக விடயங்கள் இடம்பெற்று வந்த இப்பாடசாலையை பொறுப்பேற்று வினைத்திறனுடன் திறன்பட நிர்வாகித்து வந்த அதிபரை கடமை செய்ய விடாமல் ஒரு கும்பல் தடுத்து வருவதாகவும், தொடர்ந்தும் இடையூறுகளை செய்து வருவதாகவும் தெரிவித்த பெற்றோர்கள் கொட்டும் மழையில் நனைந்த படி போராட்டத்தில் காலை முதல் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலக நிர்வாக பிரதிக்கல்வி பணிப்பாளர் மற்றும் வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள் மற்றும் சம்மாந்துறை பொலிஸார் அங்கு கூடியிருந்த பெற்றோர்களிடம் சுமூக நிலைக்காக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.





பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்களாக கடந்த காலங்களில் இருந்த சிலர் தொடர்ந்தும் பாடசாலையை சீராக கொண்டு செல்ல முடியாத வகையில் இடைஞ்சல் செய்வதாகவும் அவர்களின் 09 பிள்ளைகளுக்காக எங்களின் 165க்கு மேற்பட்ட மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்த பெற்றோர்கள் எவ்வித விட்டுக் கொடுப்புக்களுமின்றி போராட்டம் நடத்தினர். பாடசாலை அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டால் நாங்கள் எங்களின் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப மாட்டோம் என்றும் அதிகாரிகளிடம் வாதிட்டனர்.

தொடர்ச்சியாக கல்வி அதிகாரிகள் மற்றும் பொலிஸார், பெற்றோருக்கிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை காரணமாக தற்காலியமாக போராட்டத்தை கைவிட்டு பெற்றோர்கள் களைந்து சென்றுள்ளனர்.

பாடசாலை அபிவிருத்தி குழு முன்னாள் உறுப்பினர்களின் தொல்லையான நடவடிக்கை காரணமாக பாடசாலை அதிபர் தனது சொந்த விருப்பில் இடமாற்றம் கோரியிருந்தும் மாகாண கல்வி உயரதிகாரிகள் பல்வேறு விசாரணைகளை மேற்கொண்டு வந்துள்ளதுடன் அதிபரின் அவ்விடமாற்றத்தை வழங்க இதுவரை உடன்படவில்லை என தெரியவருகின்றது.



# வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கு ஒரே உதவும் கரம் IMF



## 15 விடயங்களில் இலங்கைக்கு IMF நிபந்தனை

நாட்டில் வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு முறையான திட்டம் வகுக்கப்பட வேண்டுமெனவும், தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துள்ள பொருளாதார வேலைத்திட்டத்தின் காரணமாக கடந்த சில மாதங்களாக இருந்த பொருளாதார நெருக்கடிகள் ஓரளவு குறைந்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இவ்வாறு வீழ்ச்சியடைந்த நாட்டிற்கு ஆதரவளிக்க சர்வதேச நாணய நிதியத்தை தவிர உலகில் வேறு எந்த நிறுவனமும் இல்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி, பொருளாதாரத் தைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்திற்கு மாற்று முன்மொழிவுகள் இருப்பின், அவற்றை சர்வதேச நாணய நிதியத்திடம் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கண்டி மாவட்ட வர்த்த கர்கள் மற்றும் சட்டத்தரணிகளுட னான சந்திப்பின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சில அரசியல் கட்சிகள் இதற்கான முன்மொழிவுகளை முன்வைக்காமல் மக்களிடம் பொய் சொல்லி அரசியல் நாடகம் ஆடுவதாக தெரிவித்த ஜனாதிபதி, நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்து டன் எவருக்கும் விளையாட முடியாது எனவும் வலியுறுத்தினார்.

இந்த சவால்கள் தொடர்பில் தெரியாமல் தான் ஜனாதிபதி பொறுப்பை ஏற்கவில்லை எனவும், தடைகள் வந்தாலும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை நிறுத்தப் போவதில்லை எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை தெளிவுபடுத்துவதற்கும், இந்நிலையிலிருந்து மீள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து உங்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெறுவதற்காகவும் இச்சந்திப்பு இடம்பெறுகின்றது. நாம் இன்று கடினமான காலங்களை கடந்து கொண்டிருக்கிறோம். ஒரு வீட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் போது வீட்டிலுள்ளவர்கள் அதை உணர்கிறார்கள். ஒரு வணிகம் வீழ்ச்சியடைந்தால், வர்த்தகர்கள் அதை உணர்கிறார்கள். ஆனால் ஒரு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தால் அதை ஒட்டுமொத்த மக்களும் உணருவார்கள்.

**இந்த வருட இறுதிக்குள் மக்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்க முடியும்**

பதினொரு மாதங்களுக்கு முன்னர் நாம் இந்த நிலையை எதிர்கொண்டோம். எங்களிடம் எரிபொருள், மின்சாரம், மருந்து எதுவும் இல்லை. ஒரு நாடு என்ற வகையில் நாம் மிகவும் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டோம். நாட்டின் பொருளாதாரம் முற்றிலும் முடங்கியது.

நான் ஜனாதிபதியாக பதவியேற்கும் போது இவ்வாறானதொரு பிரச்சினைக்குரிய சூழல் நாட்டில் இருந்தது. ஆனால் முறையான திட்டத் தின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம். மேலும், விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் வழங்கப்பட்டன. சரியான நேரத்தில் உரங்களை வழங்கியதால், இந்த முறை பெரும்போகத்தில் வெற்றிகரமான அறுவடை கிடைத்துள்ளது.

இப்போது எரிபொருள் வரிசை கள் இல்லை. மின்சாரம் உள்ளது. அதன்படி, நாட்டின் பொருளாதாரத்தை முந்தைய நிலையை விட படிப்படியாக சிறந்த நிலைக்கு கொண்டு வர முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இன்று பணவீக்கம் உயர்ந்துள்ளது. வட்டி விகிதம் மிக அதிகம். அதனால், வர்த்தக சமூகம் சிரமங்களை எதிர் நோக்குவதை நாம் அறிவோம். சட்டத் தரணிகளும் தங்கள் பணியை மேற்கொள் வதில் சிக்கல்களை சந்திக்க வேண்டி யுள்ளது. நாட்டின் பல அடிப்படைப் பிரச்சினை களுக்கு தீர்வுகளை வழங்கி யுள்ளோம் என்றே கூற வேண்டும். மேலும் பல பிரச்சி னைகள் நமக்கு முன்னால் உள்ளன.

ஒரு நாடு வங்குரோத்தடையும் போது, சர்வதேச நாணய நிதியத்திடம் தான் செல்ல வேண்டும். அதைத் தவிர, ஒரு நாடு வங்குரோத்தடையும் போது உதவி செய்யும் வேறு எந்த அமைப்பும் உலகில் இல்லை. பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்த ஒவ்வொரு நாடும் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியே மீண்டு வந்துள்ளது. சரிந்த பொருளாதாரத்தில் இருந்து கிரீஸ் மீண்டுவர 13 ஆண்டுகள் சென்றது. பதின்மூன்று ஆண்டுகள் ஜனாதிபதி பதவியில் இருக்கும் எதிர்பார்ப்பு எனக்கு இல்லை.

இந்த வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஒரே ஒரு ஏணிதான் உள்ளது. அதுதான் சர்வதேச நாணய நிதியம். பல்வேறு அரசியல் கட்சி கள் பல்வேறு கதைகளை கூறி வருகின்றன. சரிந்த பொருளாதாரத்தில் இருந்து மீள்வதற்கு வேறு ஏணி இருந்தால் சொல்லுமாறு நான் அவர்களுக்கு கூறுகின்றேன்.

2019 இல் இருந்ததைப் போலவே நமது வரி வருவாய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15% ஆக இருக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் குறிப்பிடுகிறது. தற்போது அது 09% ஆக குறைந்துள்ளது. நீங்கள் உங்கள் மக்களுக்கு வரிச்சலுகை வழங்குவீர்களாயின், நாம் எவ்வாறு எங்கள் மக்களிடம் அதிக வரி வசூலித்து உங்களுக்கு நிவாரணம் வழங்குவது என்று அவர்கள் எம்மிடம் கேட்கிறார்கள்.

அதனால், எமது கொள்கைகளை எதிர்ப்பவர்களுக்கும், சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி முன்மொழிவுகளை சமர்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கத் தயாராக உள்ளோம். சர்வதேச நாணய நிதியம் அந்த முன்மொழிவுகளுடன் உடன்படுகிறதா என்பதைப் பார்க்க முடியும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் கடந்த ஆகஸ்ட் மாதம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது. அதன்படி, செப்டம்பரில் அதிகாரிகள் மட்டத்தில் உடன்பாடு காண முடிந்தது. அவர்கள் எமக்கு நடைமுறைப் படுத்த பதினைந்து விடயங்களைக் முன்வைத்தார்கள். டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் அதனை நடைமுறைப்படுத்த சர்வதேச நாணய நிதியம் கால அவகாசம் வழங்கியது. ஆனால் அன்று அதைச் செய்ய முடியவில்லை. பின்னர் ஜனவரி 31ஆம் திகதி வரை அவகாசம் பெற நடவடிக்கை எடுத்தோம். அப்போதும் அந்த 15 விடயங்களை எங்களால் பூர்த்தி செய்ய முடியவில்லை. இறுதியாக பெப்ரவரி 15 ஆம் திகதி வரை கால அவகாசம் நீடிக்கப்பட்டது. பெப்ரவரி 15 ஆம் திகதி மாலை 06:00 மணிக்குள் அனைத்து விடயங்களையும் நிறைவேற்றி வாஷிங்டனுக்கு அனுப்பினோம்.

**நிறுவனங்களை பராமரிப்பதற்கு அரச வரிகளை பயன்படுத்த வேண்டாம் என IMF நிபந்தனை**

இந்தப் பதினைந்து விடயங் களில் ஒரு விடயம் மட்டுமே தாமதமாகி வருகிறது. அது மின்சார சபை கட்டண உயர்வு தொடர்பானது. மின்சார சபைக்கு வருடாந்தம் 230 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகிறது. நிறுவனங்களைப் பராமரிக்க அரசாங்க வரிகளை பயன்படுத்த வேண்டாம் என சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது. அவ்வாறு நடந்தால் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு கிடைக்காது என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நாட்டில் ஒருவர் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தும் முடிவை எதிர்த்தார்.

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்...

# ஒருங்கிணைந்த செயற்பாட்டுக்கு பௌஸியை தலைமையேற்க அழைப்பு



## பேரம்பேசலை பலமிழக்கச் செய்துள்ள தேசிய அரசியலின் மாற்றங்கள்

**சுஐப், எம் காசிம்**

முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் சமகால நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கு, தலைமைகளை ஒருங்கிணைத்துச் செயற்படுவதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இத்தலைமைகளை ஓரணியில் ஒன்றிணைப்பது சாத்தியமற்றுள்ளதால், ஒருங்கிணைந்த செயற்பாடுகளையாவது முன்னெடுக்க வலியுறுத்தப்பட் டுள்ளது. இந்த ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள், முஸ்லிம் சமூகத்தின் மூத்த அரசியல்வாதியும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. எச். எம். பௌஸி தலைமையில் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நம்பகரமான செய்திகள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சி சபைகளில் குறைக்கப்படவுள்ள பிரதிநிதிகளின் எண்ணிக்கை, விஸ்தரிக்கப்படவுள்ள வட்டாரங்கள் மற்றும் இதற்காக முன்னெடுக்கப்பட உள்ள எல்லை நிர்ணய ஆய்வுகளுக்கு ஆலோசனைகள் வழங்கும் வகையில், இந்த ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் அமையவுள்ளன. கிழக்கில், எதிர்நோக்கும் காணி மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் இதுவரை தீர்க்கப்படாதுள்ளன. இப்பிரதேசத்தை தளமாகக் கொண்டு இயங்கும் முஸ்லிம் தலைமைகளிடம் ஒற்றுமையில் லாததாலே, இப்பிரச்சினைகள் இழுபறியாகின்றன. இதனைக் கருத்திற் கொண்டு, ஏக குரலாகவும் ஒருமித்த கருத்தாகவும் பிரேரணைகள் முன்வைக்கப்படவுள்ளது.

இவ்வாறு, ஒருமித்த இணக்கப்பாட்டுடன் முன்வைக்கப்படும் பிரேரணைகளை அரசாங்கம் அவசியம் நிறைவேற்ற வேண்டும். அல்லாத பட்சத்தில் ஒருங்கிணைந்த அழுத்தங்களை இந்தச் செயற்பாட்டுக் குழு முன்வைக்கவுள்ளது.

நாட்டின், தேசிய அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தனித்துவ தலைமைகளின் பேரம்பேசலை பலமிழக்கச் செய்துள்ள நிலையில்தான், இந்த ஒருங்கிணைப்புச் செயற்பாட்டின் அவசியம் உணரப்பட்டுள்ளது. ஆட்சிக்கு வரவுள்ள கட்சி குறித்தும், அமையப்போகும் அரசாங்கம் பற்றியும் ஆரூடங்கூற இயலாதுள்ள இன்றைய நிலையில், தேசிய அரசியலில் வியூகம் வகுக்குமளவுக்கு கள நிலவரங்கள் இல்லை.விசுவாசம், நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்புக்களூடாகவே, சிங்கள தேசியவாதத்தை நெருங்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இதனால், பேரம்பேசலை விடுத்து, பரஸ்பர அரசியலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதுதான், முஸ்லிம்தலைமைகளின் ஒருங்கிணைந்த செயற்பாட்டின் தேவையை ஏற்படுத்தியுள்ளது.

இன்னும், சிங்கள தேசிய கட்சிகளில் முஸ்லிம் பிரிவு என்றோ அல்லது ஏதாவது விஷேட அமைப்புக்களோ இல்லாதுள்ளமை குறித்தும் முஸ்லிம் சிவில் சமூகம் கவனம் செலுத்தியுமிருக்கிறது.தனித்துவ தலைமைகளின் அண்மைக்கால போக்குகளில் அதிருப்தியுற்ற சிங்கள தேசிய கட்சிகள், இவ்வாறான இனத் தனித்துவத்தை அடையாளப்படுத்தும் சிறிய கட்சிகளை சிதைக்கும் அல்லது உடைக்கும் நோக்கில் செயற்படுகின்றதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. ராஜபக்ஷக்களின் ஒரே விசுவாசியாக இருந்த தேசிய காங்கிரஸுக்கு ஏற்பட்டுள்ள நிலையை வைத்தே, இக்கருதுகோளும் பலப்பட்டு வருகிறது.இது இவ்வாறிருக்கையில், தெற்கு முஸ்லிம்களின் அடையாளமாகத் தென்பட்டு வந்த முஜிபுர் ரஹ்மானின் பதவி விலகலுக்குப் பின்னரே இந்த சந்தேகம் வலுத்து வருகிறது.

# முஜிபுர் ரஹ்மானின் இராஜினாமா ஏற்படுத்தியிருக்கும் அதிர்வலைகள்



**நிப்ராஸ்**

முஜிபுர் ரஹ்மானின் பதவி விலகல், தெற்கு முஸ்லிம் தலைமைத்துவத்தில் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளதாக உணரப்பட்டுள்ளது. இளம் எம்பி ஒருவர், உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளதை, குறிப்பாக கொழும்பு மாவட்ட முஸ்லிம்கள் விரும்பவில்லை. இதன், எதிரொலிகளை

மாளிகாவத்தை, மருதானை, பொரளை, தெமட்டகொடை மற்றும் பஞ்சிகாவத்தை போன்ற முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் கேட்க முடிந்துள்ளது.

கொழும்பு மத்திய தொகுதி முஸ்லிம்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம், ஒரு உள்ளூராட்சித் தேர்தலுக்காக பேரம் பேசப்படுமளவுக்கு நலிவடைந்துள்ளது. இதை, ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே, இவரது பதவி துறத்தலுக்குப் பின்னாலுள்ள பின்னணிகள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் கொழும்பு மத்திய தொகுதி முஸ்லிம்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். 82,000 விருப்பு வாக்குகளால் தெரிவான முஜிபுர் ரஹ்மான், எதிர்காலத்தில் தெற்கு முஸ்லிம்களின் தலைமைக்கான அடையாளமாக வளர்ந்து வந்தார்.

ஜாபிர் ஏ காதர், ஹலீம் இஷாக் மற்றும் எம். எச். முஹம்மத் போன்ற தெற்கு முஸ்லிம்களின் முன்னோடித் தலைவர்களின் இடத்துக்கு வளர்த்தெடுக்கும் விருப்புடனே, முஜீபுர் ரஹ்மானுக்கு வாக்களித்ததாகதெரிவித்தபலர்,தங்களைக் கேளாமல், அவர் பதவி துறந்திருக்கக் கூடாதென்றும் தெரிவித்துள்ளனர். தெற்கில் ஒரு முஸ்லிம் அடையாளம் வளர்வதை அல்லது தென்படுவதை சஜித் பிரேமதாஸா விரும்பவில்லையா? என்றும் இவர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர். ஈஸ்டர் தாக்குதலையடுத்து கொழும்பு மாவட்ட முஸ்லிம்களே அதிக நெருக்குவாரங்களுக்கு உள்ளாகினர். அன்று நிலவிய அரச

## தேசியப் பட்டியலில் உள்வாங்கப்படுவாரா?

ஒடுக்குமுறைக்கு எதிராக முஜிபுர் ரஹ்மான் எழுப்பிய எதிர்ப்புக் குரல்கள்தான், அவரை இந்தளவு எழுப்பிவிட்டது. இந்நிலையில், தேசிய அரசியலிலிருந்து அவரை மலினப்படுத்த எடுக்கப்பட்டிருக்கும் இந்தப் பதவி விலகலுக்கு சஜித் பிரேமதாஸாவின் ஐக்கிய மக்கள் சக்தி, என்ன பரிசு தரப் போகிறது என்பதையே கொழும்பு முஸ்லிம்கள் எதிர்பார்த்துள்ளனர்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், கிழக்கில் உதயமான காலப் பகுதியிலும் தெற்கு முஸ்லிம்கள் சிலரின் சீண்டல்கள், சந்தேகங்களுக்கு உள்ளாக நேர்ந்தது. இந்த நேரத்தில் அன்றிருந்த தெற்கு தலைவர்களான எம். எச். முஹம்மத், ஏ.எச்.எம். அஸ்வர் மற்றும் அமைச்சராக இருந்த ஏ. எச். எம். பௌஸி ஆகயோரே, தனித்துவ அரசியலுக்கும் தென்னிலங்கை முஸ்லிம்களுக்கும் சம்மந்தமில்லை என்பதை தெளிவுபடுத்தியிருந்தனர்.

எனவே, இதுபோன்ற இன்னல்கள், நெருக்கடிகளுக்கு முன்வந்து, தெற்கு முஸ்லிம்களுக்கு வழிகாட்ட முஜிபுர் ரஹ்மான் தேசிய அரசியலில் மீண்டும் நுழைய வேண்டும்.

தேசிய பட்டியிலிருந்தாவது இவருக்கு ஒரு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்றும் கொழும்பு முஸ்லிம்கள் விரும்புகின்றனர். முன்னாள் ஜனாதிபதி ரணிசிங்க பிரேமதாஸ தெற்கு முஸ்லிம் பிரதிநிதித்துவங்களை மாத்திரமல்ல, கிழக்கிலிருந்த கட்சியின் முஸ்லிம் பிரதிநிதித்துவங்களைப் பாதுகாத்த வரலாற்றை அவரது மகன் புரிந்துகொள்வது அவசியமென, தென்னிலங்கை புத்தி ஜீவிகள் கருதுகின்றனர்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் 1989 இல், முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். இதன் பிரகாரம், சம்மாந்துறையில் எம். ஏ. மஜீத் மற்றும் கல்முனை ஏ. ஆர். எம். மன்சூர் ஆகியோர் போட்டியிடுவதிலிருந்து தவிர்க்கப்பட்டனர். இருந்தாலும், இவ்விருவரையும் தேசியப் பட்டிலூடாக பாராளுமன்றம் நுழைய வைத்த, தனது தந்தையின் கைங்கர்யத்தை அவரது மகன் சஜித் பிரேமதாஸ முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும் என்றும் தென்னிலங்கை புத்திஜீவிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

2 ஆம் பக்க தொடர்ச்சி...

## பாராளுமன்றம் நகைச்சுவை....

“Sit down, I brought to you to the politics." (உட்காரு. உன்னை நான் தான் அரசியலுக்குள் கொண்டு வந்தேன்...)

அதிகார தோரணையில் அவர்களை அடக்கிய ஜனாதிபதி ரணில், பாராளுமன்ற சிறப்புரிமையோடு தான் சொல்ல வேண்டிய நகைச்சுவையைச் சொல்லிவிட்டே சென்றார்.

ஒன்று மட்டும் புரிந்தது. உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு எந்த வகையிலும் இடமில்லை; இடம் அளிக்கவும் மாட்டேன் என்பதை காஷியமாகச் சொல்லிவிட்டார்.

உண்மையில், இன்றைய நெருக்கடி நிலையில், நிதி பிரச்சனை தான். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப திறைசேரியை நிரப்புவதற்கு அரசு முயற்சி செய்து கொண்டிருக்கின்ற பொழுது, திறைசேரியில் இருந்து நிதியை பயன்படுத்துவது பொருளாதார நெருக்கடியை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கும். இதில் மாற்றுக் கருத்து இல்லை. யதார்த்தமான உண்மை. ஆனால், சுதந்திர தின கொண்டாட்டம், குடியரசு பெரஹர... உட்பட ஏராளமான கொண்டாட்டங்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் வீண் அடிக்கப்படுகின்ற பொழுது, ஜனநாயக உரிமையை பேணுகின்ற விடயத்திற்கு நிதியை ஒதுக்க முடியாதா...?

நிலைமையை பார்க்கின்ற பொழுது, உள்ளூராட்சி தேர்தல், திட்டமிட்டே குழப்பியடிக்கப்படுகிறது என்பது நன்றாகவே தெரிகிறது. அதாவது, நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி, தேர்தல் நடத்துவதை விரும்பவில்லை. அதனால், காரணங்கள் சொல்லி மழுங்கடிக்கப்படுகிறது.

பூசி மெழுகினாலும் பூச்சாண்டி காட்டினாலும், தேர்தலை எதிர்கொள்ளும் திராணி, ஜனாதிபதியின் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இல்லை; ஆளும் மொட்டுக் கட்சிக்கும் கிடையவே கிடையாது.

நாட்டை வங்குரோத்தடைய செய்து இன்றைய நெருக்கடி நிலைக்கு வழிவகுத்தது ராஜபக்ஷகளால் உருவாக்கப்பட்ட இந்த மொட்டு கட்சியே.

அதேபோல, கடந்த பாராளுமன்றத் தேர்தலில், மக்களால் முழுமையாக நிராகரிக்கப்பட்ட கட்சிதான் ஐக்கிய தேசிய கட்சி. இந்தக் கட்சியின் தலைவர் இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஆகவே, மக்கள் மத்தியில் முழுமையாக, செல்வாக்கிழந்து நிற்கின்ற இந்த இரு கட்சிகளும் தற்போதைய நிலையில் தேர்தலை எதிர்கொள்வதற்கு தயாராக இல்லை. மக்களின் நாடித்துடிப்பறிந்து இரு கட்சிகளும் தேர்தல் களம் இறங்க தயக்கம் கொண்டுள்ளன.

இதுதான் இன்றைய குழப்ப நிலைக்கு நூறுவீத காரணம் மட்டுமல்ல, அடி நாதமாகவும் இருக்கின்றது.

முழுக்க முழுக்க மொட்டுக் கட்சியின் பலத்தோடு இருக்கின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்தக் கட்சியின் நிபந்தனை கைதியாக இருக்கும் வரை இப்படியான நிலை தொடர்பு கொண்டு தான் இருக்கும்.

இந்த நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழு, மார்ச் மாதம் ஒன்பதாம் திகதி தேர்தல் நடைபெறாது என்று அறிவித்துள்ளது. இது தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ அறிவிப்பாக இருக்கின்றது. நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதியின் தலையீட்டால், இடியப்ப சிக்கலாக்கப்பட்டிருக்கும் இந்த தேர்தல் தொடர்பான விடயங்களில், தேர்தல் ஆணைக்குழுவும் குழம்பிப் போய் இருக்கிறதோ? என்று எண்ணத் தோன்றுகிறது.

எதிர்வரும் மூன்றாம் திகதி கூடுகின்ற தேர்தல் ஆணைக்குழு, உள்ளூராட்சி தேர்தல் நடத்துவதற்கான புதிய திகதி ஒன்றை ஏக மனதாக தீர்மானிக்க இருக்கின்றது. ஆனாலும் தேர்தல் நடத்துவதற்கான நிதியை எங்கிருந்து எடுக்கப் போகின்றார்கள்....?

தேர்தல் நடத்துவதற்கு நிதி தேவை என்று தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபயவர்த்தனவிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதியான ரணில் விக்ரமசிங்கவும் ஆளும் தரப்பு உறுப்பினர்களும் தேர்தல் நடத்துவதற்கு நிதியை வழங்கக் கூடாது என்று அடம் பிடித்து இருக்கும் நிலையில், உள்ளூராட்சி தேர்தலை நடத்துவது சாத்தியமாகுமா....?

# ஜனாதிபதியை கொல்ல சதி:

## ஊடக அறிக்கையை மறுத்த பொலிஸார்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை படுகொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக கூறப்படும் குற்றப் புலனாய்வு திணைக்களம் (CID) விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தனியார் வானொலியின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட செய்தியை சிறிலங்கா காவல்துறை மறுத்துள்ளது.

இலங்கையின் அரசியல் கட்சியொன்றைச் சேர்ந்த குழுவொன்று இது தொடர்பில் வெளிநாடுகளில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியதாக இன்று (28) வெளியிடப்பட்ட செய்தியில் கூறப்பட்டுள்ளதாக பொலிஸ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வார காலத்திற்குள் இந்த படுகொலை முயற்சியை மேற்கொள்வதற்கு குழு திட்டமிட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அவ்வாறான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும், ஜனாதிபதியை படுகொலை செய்ய முயற்சித்ததாகக் கூறப்படும் எந்தவொரு விசாரணையையும் ஆரம்பிக்கவில்லை எனவும் பொலிஸார் தெளிவுபடுத்தியுள்ளனர்.

5 ஆம் பக்க தொடர்ச்சி...

## வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கு...

இதன் காரணமாக, சர்வதேச நிதியத்தின் ஆதரவைப் பெறுவது ஆறு வாரங்கள் தாமதமானது. இல்லையென்றால், ஜனவரி இறுதிக்குள் இதனை நிறைவுசெய்திருக்கலாம். தற்போது, எங்களுக்கு வழங்கப்பட்ட 15 விடயங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. இப்போது சர்வதேச நாணய நிதியத்திற்கான சந்தர்ப்பமே உள்ளது.

எங்களுக்கு கடன் வழங்கிய பாரிஸ் கிளப், இந்தியா மற்றும் சீனா என்பன கடனை மறுசீரமைக்க இணக்கம் தெரிவித்துள்ளன. அதற்குத் தேவையான நிதி உத்தரவாதத்தை வழங்கும் முறைமை பாரிஸ் கிளப்பில் உள்ளது. இந்தியாவிடம் மற்றொரு முறைமை உள்ளது. சீனா மற்றொரு முறையை நடைமுறைப்படுத்துகிறது. பாரிஸ் சமூக நாடுகள் தங்கள் சொந்த முறையைத் தவிர இந்தியாவின் முறையையும் ஏற்றுக்கொண்டன, ஆனால் சீனாவின் முறை குறித்து இன்னும் உடன்பாடு ஏற்படவில்லை.

## அரசியலுக்காக நாட்டின் எதிர்காலத்துடன் விளையாட வேண்டாம்

இது குறித்து மேலும் கலந்துரையாடப்பட்டு வருகிறது. அனைவரையும் ஒரே மேடைக்கு கொண்டுவந்து கலந்துரையாட வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியமும் பரிந்துரைத்தது. ஆனால் சீனா உலக வல்லரசாக இருப்பதால் அவர்களின் முறை வேறு. ஜி-20 நாடுகளின் நிதியமைச்சர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி இந்தியாவின் பெங்களூரில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து நாடுகளின் கடனை எவ்வாறு மறுசீரமைப்பது குறித்து அங்கு ஆராயப்பட உள்ளது. அதில், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முறை குறித்து சீன நிதி அமைச்சருடன் கலந்துரையாட எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அவர்களின் நிலைப்பாட்டின்படி, செயல்படுத்த இரண்டு அல்லது மூன்று மாற்று வழிகள் உள்ளன.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து உதவி பெறாவிட்டால், எதிர்காலத்தில், எரிபொருளின்றி 12 மணி நேர மின்வெட்டுடன் வாழ வேண்டிய நிலை ஏற்படும். சிறு போகத்திற்கு உரம் கிடைக்காது. இந்த நிலையில் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

## பாராளுமன்றத்திலுள்ள 225 எம்.பிக்கள் மீதும் மக்கள் நம்பிக்கை இழப்பு

நாட்டின் அடிப்படைப் பிரச்சினை பொருளாதாரப் பிரச்சினையாகும். அதை நோக்காகக் கொண்டே நாம் செயற்பட வேண்டும். அது இல்லாமல், இந்த பிரச்சினையை மறைக்க முடியாது.

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்தல் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் ஒன்றல்ல. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் திகதி குறித்து நீதிமன்றம் முடிவெடுக்கும். ஆனால், பிரதம நீதியரசர் உள்ளிட்ட அனைத்து நீதிபதிகளும் ஒன்றாக அமர்ந்தாலும் கூட நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையை, நீதிமன்றத்தில் தீர்க்கக்கூடிய ஒன்றல்ல. பொருளாதாரத்தை முன்கொண்டுசெல்லும் பொறுப்பு பாராளுமன்றத்திற்கே இருக்கிறது. எனவே 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீட்டெடுக்க பாடுபட வேண்டும்.

தேவைப்பட்டால், மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தி, இரான் மற்றும் ஹர்ஷ போன்றவர்களின் முன்மொழிவுகளைக் கூட சர்வதேச நாணய நிதியத்தில் சமர்ப்பிக்க முடியும். இதற்கான ஆதரவையும் வழங்க முடியும். சில அரசியல் கட்சிகள் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதில்லை. இது தொடர்பாக மக்களிடம் பொய் சொல்லி அரசியல் நாடகம் ஆடுகின்றனர். நாட்டின் எதிர்காலத்துடன் விளையாட முடியாது. நாட்டின் இளைஞர்களின் எதிர்காலத்திற்கு நாங்கள் பொறுப்பு.

எனவே, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நான் எடுப்பேன். யாரிடமாவது மாற்று முன்மொழிவுகள் இருந்தால், வாஷிங்டனில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர்களுடன் கலந்துரை யாடும் வாய்ப்பை பெற்றுக் கொடுக்க விரும்புகிறேன்.

யாரும் முன்வராத நிலையிலே இந்த நாட்டை நான் பொறுப்பேற்றேன். நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புகையில் பலவிதமான விமர்சனங்களுக்கு ஆளாக வேண்டி வரும் என்பதை அறிந்தே ஜனாதிபதிப் பதவியை ஏற்றேன். ஆனால் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் நான் எடுப்பேன். இந்த வருட இறுதிக்குள் நாட்டு மக்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்க முடியும். அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து பொருளாதார வளர்ச்சிக்கான ஆரம்பத்தை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இன்று கட்சி, எதிர்க்கட்சி வேறுபாடின்றி 225 பேர் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். எனவே, மக்களின் நம்பிக்கையை மீண்டும் பெற முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வது எப்படி என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம். அதற்கு உங்களின் தலைமைத்துவத்தை எதிர்பார்க்கிறோம்.2024 ஆகும் போது மீண்டும் வளர்ச்சியை நோக்கி பயணிப்போம் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது எனக் கூறினார்.

# திருகோணமலையில் பால் உற்பத்தி பாதிப்பு..!



## ஒருங்கிணைந்த பாற்பண்ணை திட்டம் வெற்றியளிக்குமா...?

✍ அ . அச்சுதன்

**பால்** உற்பத்தி பண்ணை என்பது சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகள் வருமானம் ஈட்டக்கூடிய ஒரு முக்கிய உப தொழிலாகும். கால்நடைகளினால் கிடைக்கும் எரு உரம் மூலம் இயற்கை உரம் தயாரிக்கவும் மண்ணை வளப்படுத்தவும் பயிர்கள் நன்கு வளரவும் உதவுகிறது. கால்நடைகளின் சாணத்திலிருந்து தயாரிக்கப்படும் சாண எரிவாயு வீட்டு உபயோகத்திற்கு எரிபொருளாக மட்டுமன்றி கிணற்றிலிருந்து நீர்இறைக்கும்இயந்திரங்களுக்கு எரிபொருளாகவும் பயன்படுகிறது.

ஆரம்பத்திலிருந்தே வேளாண்மை சார் தொழில்களில் பெரும்பாலான வேலை வாய்ப்பும் இலாபம் ஈட்டக்கூடிய தொழிலாகவும் பால் பண்ணை அமைகிறது. பால் பண்ணை வருடம் முழுவதும் வேலை வாய்ப்பை வழங்கக்கூடிய ஒரு தொழில் முயற்சியாகும்

இருப்பினும் இலங்கையின் பால் உற்பத்தி கைத்தொழில் இன்னும் வளர்ந்து வருகின்ற ஒரு துறையாகக் காணப்படுவதுடன், கேள்வியை ஈடுசெய்யும் அளவிற்கு வழங்கல்இன்னும்முழுமையானஅளவில் கிடைப்பதில்லை. உள்நாட்டு பால் உற்பத்தி மொத்த பால் தேவையில் 17 வீதத்தை மட்டுமே நிவர்த்தி செய்கின்ற அதேவேளை, மிகுதி இறக்குமதி செய்யப்படுகின்றது.

தற்போது இறக்குமதி அரசினால் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், எதிர்வரும் சில ஆண்டளவில் இலங்கை பாலினால் தன்னிறைவு பெற்றதாக மாற்றுவதே கால்நடை வள மற்றும் கிராம அபிவிரத்தி அமைச்சின் நோக்கமாக உள்ளது.

கடந்த கால யுத்தத்தின் பின்னரான காலப் பகுதியில் கிராமங்களில் அதிகமான வீடுகளில் ஒன்று அல்லது இரண்டு பசு மாடுகள் காணப்பட்ட போதிலும் சந்தை வாய்ப்பு பற்றிய தெளிவின்மை காரணமாக அவர்கள் பால் கறப்பது குறைவு. ஆனால் திருகோணமலை மாவட்டத்தில் குறிப்பாக திருகோணமலை நகர் பகுதியில் தூய பசுப் பாலிற்கான தேவை அதிகளவில் காணப்படுகின்றது.

இந்த நிலையில் இத்துறையில் ஈடுபடுகின்றவர்கள் மிக குறைவாகவே உள்ளனர். இதனை அறிந்து முதற்கட்டமாக டி. இரவிகாந்தன் என்பவரால் 2012 ஆம் ஆண்டில் இருந்து கும்புறுபிட்டியிலிருந்து நிலாவெளி பெரியகுளம் வரையிலான கிராமங்களில் உள்ள சிறிய அளவில் பால் உற்பத்தி செய்பவர்களிடம் இருந்து தூய பசுப்பாலை கொள்வனவு செய்து திருகோணமலை நகரப் பகுதியிற்கு கொண்டு சென்று விற்பனை செய்ய ஆரம்பித்தார்.

படிப்படியாக கொள்வனவு செய்யப்பட்ட பாலின் அளவும் அதிகரித்து சென்றதோடு அவர் சவால்களையும் எதிர் நோக்க வேண்டியிருந்தது.

இதற்காக, அவர் பகுதி நேர வேலையாளை தொழிலுக்கு அமர்த்தி காலையும் மாலையும் வாடிக்கையாளர்களுக்கான பசுப்பால் விநியோகம் நடைபெற்றது. மேலும் சேகரிக்கப்படும் பாலை பழுது படாமல் பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனவே, இத்தொழில் முயற்சியின் விரிவாக்கத்தின் அடுத்த கட்டமாக 500 லீற்றர் கொள்ளளவுடைய இயந்திரத்தை கொள்வனவு செய்து தினமும் சேகரிக்கப்படும் பால் குளிரூட்டப்பட்டு பாதுகாக்கப்பட்டது. இதற்காக மக்கள் வங்கி கடனுதவி வழங்கியிருந்தமை தன் முன்னேற்றத்திற்கான படிக்கல்லாக அமைந்திருந்தது என இரவிகாந்தன் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.





அவர் தொழிலினை தொடங்கிய முதல் மாதத்தில் 300 லீட்டராக கொள்வனவு செய்து விற்பனை செய்யப்பட்ட அவரது வியாபாரம் கடந்த 06 ஆண்டுகால வளர்ச்சியில் 3000 – 4000 லீட்டர் வரை உயர் வளர்ச்சியை எட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறன நிலையில்தான் இவ்வருடம் ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக அவரது தொழில் மாத்திரமன்றி பால் பண்ணையாளர்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட உற்பத்திகளை செய்யும் அனைவரும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு நாளைக்கு 250 லீட்டர் - 300 லீட்டர் பாலினை கொள்வனவு செய்த அவர் தற்போது 35 லீட்டர் - 50 லீட்டர் பாலினையே கொள்வனவு செய்ய முடிகிறது. இப்பாலானது தனது வாடிக்கையாளர்களின் தேவையினை நிறைவேற்ற முடியாமல் மிகுந்த சிரமப்படுகின்றார்.

தனது வாடிக்கையாளர்களை எடுத்துக் கொண்டால் அதிகமானவர்கள் அரச அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களில் கணவன் மனைவி இருவரும் வேலைக்கு செல்பவர்களாக காணப்படுகின்றனர். இவர்களின் காலைநேர வேலைப் பளுக்களுக்கிடையிலும் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பும் அவசரத்திலும் காலை உணவை எடுத்துக்கொள்வதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடுகிறது. இச்சந்தர்ப்பத்தில் அவர் அதிகாலை 4 மணி தொடக்கம் வீடுகளுக்கு சென்று பாலினை விநியோகம் செய்வதினூடாக அவர்களுக்கான காலை ஆகாரமாக நிறை உணவான பாலினை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தி கொடுப்பதுடன் அதனூடாக அவர் வருமானத்தையும் ஏற்படுத்தி கொண்டுள்ளார். அத்துடன் திருகோணமலையிலுள்ள ஆதரவற்ற சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கும் இந்து ஆலயங்களுக்கான அபிஷேகம், பொங்கல் தேவைகளுக்கும் பாலினை வழங்கி வருகின்றார் என்பதும் முக்கியமானவிடயமாகும்.

அத்துடன் பால் மேலதிகமாக கிடைக்கும் போது பால் டொபி, தயிர், நெய் போன்ற உப உற்பத்திப் பொருட்களையும் செய்து விற்பனை செய்து வருகின்றார். இதனால் விசேட வைபவங்களின் போது கிடைக்கப் பெறும் வாடிக்கையாளர்களின் ஓடர்களையும் சிறப்பாக நிறைவேற்றி வருகின்றார். அவருடைய இத் தொழில் முயற்சிக்குஅவரது குடும்ப அங்கத்தவர்கள் ஆதரவாக உள்ளமை அவருக்கு ஒரு பெரிய பலமாக உள்ளது . இதன் காரணமாக தனது வர்த்தக நாமமானது சக்தி பால் என்று மிகவும்பிரபல்யமாகதிருகோணமலையில் விளங்குகின்றது.

இது இவ்வாறிருக்கையில் தற்போதைய காலநிலை மற்றும் வறட்சி காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் பாலின் உற்பத்தி மிகவும் குறைவடைந்து செல்கிறது. இதனால் பெரும்பாலான பால் உற்பத்தியாளர்கள் பால் கறப்பதை நிறுத்தி விட்டார்கள்.

தற்போது போதியளவு பால் உற்பத்தியின்மையால் வாடிக்கையாளர்களின் தேவையை பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டு வருகிறது. அதற்காக கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தியுடன் தொடர்புடைய பால் பண்ணையாளர்கள், பால் கொள்வனவாளர்கள் அரச கால்நடை அபிவிருத்தி சுகாதார திணைக்கள அலுவலர்கள் என்று பல தரப்பினருடனும் பால் உற்பத்தியை அதிகரிப்பதிலுள்ள சாதக பாதக நிலைமைகளை தொடர்பாக கலந்துரையாடினேன்.

இக்கலந்துரையாடல்களினூடாக இலங்கையில் அதிகளவான பால் உற்பத்தியை மேற்கொள்ளவேண்டிய தேவை மற்றும் 2024 ம் ஆண்டுக்கிடையில் பால் உற்பத்தியில் தன்னிறைவடைய வேண்டிய முயற்சியினை மேற்கொண்டு வருவதாகவும் இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் அளவினை குறைக்க வேண்டும் எனவும் அரசு திட்டமிட்டுள்ளன. இவ்வாறான நிலைமையில் பால் உற்பத்தியை அதிகரிப்பதனூடாக ஒரு நிரந்தரமான தொழிலினை தொடர முடியும் என்ற நம்பிக்கையில் ஒருங்கிணைந்த பால் பண்ணை திட்டம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு அவர் திட்டமிட்டுள்ளார்.

இத்திட்டங்களை செய்வதற்காக அதனுடன் தொடர்புடைய பயிற்சிகளையும் பெற்றுக் கொண்டுள்ளதுடன் அதற்கான நிதி ஆதாரத்தினை தொழில்துறை அபிவிருத்தி சபையின் வழிகாட்டலுடன் மக்கள் வங்கியில் கடனுதவியினை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தினையும் ஏற்படுத்தியுள்ளார்.

எனவே தான் இத்திட்டத்தை மேலும் விரிவாக்கம் செய்யும் நோக்கத்தில் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பெரியகுளம் கிராமத்தில் ஒருங்கிணைந்த பால் பண்ணை ஒன்றை 5 ஏக்கர் காணிப் பரப்பில் அமைப்பதற்காக திட்டமிட்டுள்ளேன் என்றார். இதன் மூலம் இவருடைய முயற்சி பாராட்டத்தக்கது.

இந்த நிலையில், திருகோணமலையில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு கால்நடைகளின் மேச்சல் தரவைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அப்பகுதிகளில் பயிர் செய்கை இடங்களாக மாற்றப்படுவதை தடுக்க வேண்டும். கால் நடைகளை பராமரிப்பதில் கால் நடை உரிமையாளர்களுக்கு அரசினால் பயிற்சிகள், கடன் உதவிகள் வழங்கப் படவேண்டும் என இத்தொழிலில் ஈடுபடுகின்றவர்களின் கோரிக்கையாக இருக்கின்றது.

# தாய்மொழி



ஏ.எச்.ஏ. ஹுஸைன்
*husseinmedia000@gmail.com*

மொழிக்கு இன, மத, பேதமில்லை. ஆயினும், எமது நாடு மொழியை அடிப்படையாகக் கொண்டு இன்னமும் பிளவுபட்டுத்தான் நிற்கிறது.

“அடுத்தவரின் மொழி உங்களுக்குத் தெரிந்தால் ஆயிரம் நட்புறவுகள் உங்களருகில் அமைந்து விட்டது என்று அர்த்தம்” இந்த வார்த்தையை காலம் சென்ற முன்னாள் ஜனாதிபதி ரணசிங்ஹ பிறேமதாஸ அவர்கள் சிலாகித்தப் பேசுவது வழக்கம்.

“மொழி அடுத்தவரோடு அன்பை வளர்க்கும் கருவி” என்றும் அவர் கூறுவார்.

“மொழிக்கு உரித்தான கௌரவத்தை வழங்காத மனப்பான்மை காரணமாகவே நாம் கடந்த முப்பது ஆண்டு காலம் துன்பியல் போரை எதிர்நோக்கினோம்.

பிரச்சினைக்கான தீர்வு வெடி மருந்துகளிடமும் ஆயுதங்களிடமும் கையளிக்கப்பட்டதன் மூலம் எமது நாட்டிற்கே உரித்தான அனைத்து மனித, பௌதீக, அறிவுசார் வளங்களை அசாதாரணமான முறையில் அழித்துக் கொண்டோம்.

இவை அனைத்தையும் விட எமது மனிதத்துவத்தையும், மனித நேயத்தையும் நாம் தொலைத்தும் விட்டோம்.

யுத்தம் முடிவடைந்து விட்டது. ஆனால், யுத்தம் ஏற்பட்டதற்கான மூல காரணங்கள் முடிவுறுத்தப்படவில்லை. எனவே, இப்போதாவது மேற்படி காரணிகளை இல்லாதொழிப்பதற்கு அவசியமான புத்தி எமக்குக் கிட்ட வேண்டும்.

இலங்கையில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ளும் சிறுபான்மையினர் தங்களது குரலை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்ல ஆங்கிலக் கல்வி அவசியம் என்று வலியுறுத்துகிறார் ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியம் மற்றும் கென்ற் ஆங்கிலக் கல்வி நிலையம் ஆகியவைகளின் பணிப்பாளரான அனீஸா பிர்தௌஸ்.

கென்ற் ஆங்கிலக் கல்வி நிலையத்தின் கல்விச்செயற்பாடுகளில் சிறந்த அடைவைப் பெற்ற 273 மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கி வைக்கும் 13வது வருடாந்த நிகழ்வு காத்தான்குடி மத்திய கல்லூரியில் கடந்த 19.02.2023 அன்று இடம்பெற்றபோது இலங்கையர்களுக்கு ஆங்கிலக் கல்வியின் அவசியம் குறித்து அவர் சிலாகித்துப் பேசினார்.

அங்கு மேலும் உரையாற்றிய பணிப்பாளர் அனீஸா, ஆங்கிலத்தைக் கற்பது வெறுமனே ஒரு பாடத்தைக் கற்பது போன்றாகாது. அது உங்களுக்கான ஒரு சர்வதேச தகைமைப் பத்திரமாக இருக்கும். இப்பொழுது நமது நாட்டின் பொருளாதார மற்றும் ஸ்திரமற்ற நிலைமை காரணமாக வெளிநாடுகளுக்குத் தொழில் தேடிச் செல்லும் நிலைமையைப் பார்க்கிறோம்.

அதேவேளை சிறுபான்மையினராகிய நாங்கள் பல்வேறு வகையான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டும் இருக்கின்றோம்.

இந்நிலைமையில் சர்வதேச மொழியான ஆங்கிலத்தில் எங்களது குரல்களை சர்வதேச மட்டத்திற்கு உயர்த்தி எங்களது உரிமைகளைக் கேட்டுப் பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலைடியிலும் நாங்கள் இருக்கின்றோம்.

சர்வதேச மட்டத்திற்கு நமது பிரச்சினைகளைக் கொண்டு செல்வதற்கு சர்வதேமொழியான ஆங்கிலத்தினூடான தொடர்பாடல் அறிவு இல்லாதிருப்பது ஒரு தடையாக இருந்து கொண்டிருக்கின்றது.

## ‘மொழிக்கு கௌரவம் இல்லாமல் போனதால் 30 ஆண்டு துன்பியல் வாழ்க்கை பாடமானது’










ஆகவே, ஆங்கிலத்தில் கற்று புலமை பெற்று நாம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற வேண்டும். ஆங்கில மொழி ஒருவருடைய ஆளுமையை உருவாக்கும் என்பதில் ஐயப்பாடு இல்லை. எனவே தற்போதைய நாட்டு பொருளாதார வீழ்ச்சி மற்றுமுள்ள நெருக்கடி நிலைமைகளுக்கு தக்க தருணத்தில் கைகொடுக்கக் கூடியது ஆங்கிலக் கல்வியோகும்” என்றார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம். அமீர், காத்தான்குடி கோட்டக் கல்வி அதிகாரி எம்.எம். கலாவுதீன், மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் முன்னாள் தலைவர் எம்.ஐ.எம். நவாஸ் உட்பட்ட கல்வியியலாளர்கள், ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தினர். மேலும் மாணவர்களின் கலை நாடக வெளிப்படுத்தல்கள் ஊடாக ஆங்கிலக் கல்வியின் அவசியம் உணர்த்தப்பட்டது.

முக்கியமாக சர்வதேச தொடர்பாடலுக்கான ஆங்கில அறிவைப் பெற்றிருப்பதன் மூலம் நாட்டின் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி பொருளாதார அபிவிருத்திக்கான உத்திகளையும் வகுத்துக் கொள்ளலாம்

மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு வாழ மொழியறிவு நமக்கு பல வழிகளில் உதவும். அடுத்தவரின் மொழியை நாம் அறிந்திருப்பது விலை மதிக்க முடியாத சொத்தாகும்.

“அம்மா” என்பது நாம் கேள்விப்பட்ட மிக இனிமையான சொல். எனவே, மொழி தாயைப்போலவே மிகவும் நெருக்கமானது, முக்கியமானது.

மொழியை கௌரவிப்பதன் மூலம் அவர் கௌரவிக்கப்படுகின்றார். ஒருவரின் மொழியை மற்றவர் தாழ்த்துவதால் அவர் தாழ்த்தப்படுகின்றார். அனைத்தையும் எமக்கு மொழியே கற்றுத் தருகின்றது.

வேற்று மொழியைப் பேசுவதன் மூலமும் பயன்படுத்துவதன் மூலமும் தனிநபர் என்ற வகையில் பெற்ற உரிமை காரணமாகவே கௌரவத்திற்குப் பாத்திரமாகின்றோம்.

இந்த உரிமை மூலம் பெறும் மகிழ்ச்சி மற்றையவரின் உரிமையாகும். இத்தகையதொரு சூழலிலேயே சமாதானத்தையும் சுபீட்சத்தையும் அனைவரும் பெறமுடியும்.

எமது நாடு ஒரே நாடு, நாம் ஒரு தாய் மக்கள், ஒரே குடையின்கீழ் வாழவேண்டும்” என்பது வாய் வழியாக கூறப்படும் விடயமே தவிர மொழி தொடர்பாக எதுவித செயற்பாடுகளோ, நடைமுறைகளோ கவனத்தில் எடுத்தாளப்படவில்லை. எதுவும் நடைமுறையில் இல்லை.

நம் நாட்டில் வாழும் இரு மொழி இனத்தவர்களுக்கும் தம்முடன் ஒட்டிப்பிறந்த பிறந்ததாய்மொழியைத்தவிர ஏனையமொழியில் சரளமாக உரையாட முடிவதில்லை.

சிங்களமும், தமிழும் அரச கரும மொழிகளாயிருத்தல் வேண்டுமென்ற சட்டம் 1944.05.04ம் திகதி அரச சட்டசபையில் அங்கீகரிக்கப்பட்டது.

1948ம் ஆண்டு நமக்கு ஓரளவு சுதந்திரம் கிடைத்தது. அப்போது நமது நாட்டின் அரச கரும மொழி ஆங்கிலமாகத் திகழ்ந்தது. சுதந்திரத்தின் பின் ஆங்கிலத்திலிருந்துவிடுபட்டு ஆங்கிலத்திலிருந்த சட்டங்கள் சிங்களத்திற்கு மாற்றப்பட்டதுடன், ஆங்கிலமொழி இணைப்பு மொழியாகப் பேணப்பட்டது.

சட்டம், நிருவாகம், நீதி, கல்வி என்பன ஆங்கிலத்திலிருந்து சிங்கள மொழிக்கு மாத்திரமே மொழிபெயர்கப்பட்டதுடன் தமிழ் மொழிக்குரிய மொழிபெயர்ப்புகள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை.

இதனால் சிறுபான்மை மக்களுக்கு உளரீதியான தாக்கம் ஏற்பட்டமையே நாளடைவில் இரு மொழியினரையும் பிளவுபடுத்தியது.

இலங்கையில் 75 சதவீதமான பகுதிகளில் அமைந்துள்ள அரச திணைக்களங்களின் நாளாந்த செயற்பாடுகள், நிருவாக நடவடிக்கைகள் அனைத்தும் சிங்கள மொழியிலேயே நடைபெறுகின்றன.

தலைமை அலுவலகங்களில் இருந்து வரும் சுற்று நிருபங்கள், கடிதங்கள், உத்தரவுகள் என்பன சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மாற்றம் செய்யப்படாமல் சிங்களத்திலேயே தமிழ் பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இதனால் அலுவலகங்களில் அரச அதிகாரிகளுக்கும், மக்களுக்குமிடையில் பாரியளவிலான அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.”

தமிழ் நீதிமன்ற மொழியாகவும், நிருவாக மொழியாகவும் வடக்கு கிழக்கில் அமைகின்ற ஏற்பாடுகள் வெறும் சுற்று நிருபங்கள் மூலமே நடைமுறையில் இருந்து வந்துள்ளது.

மிக நீண்ட போராட்டத்தின் பின்பே தமிழ் மொழி அரச கரும மொழி அந்தஸ்தைப் பெற்றது. அந்த அந்தஸ்தைக் கூட சரியான முறையிலே பிரயோகிப்பதில் தடைகள் இருக்கின்றன.

இலங்கைச்சிறுபான்மையினராகிய நாம் முறையாக பன்மொழி பயில வேண்டும்.

2006ம் ஆண்டில் இருந்து தற்போது வரை தமிழ்நாட்டில் 23968 அரசுப் பள்ளிகள் தமிழ் வழிக் கல்வியில் இருந்து ஆங்கில வழிக் கல்விக்கு மாறியுள்ளதாக பிபிசி தகவல் வெளியிட்டுள்ளது.

தாய் மொழிக்காக போராடி உயிரிழந்தவர்கள், அதற்கான இயக்கத்தை நினைவு கூறி, அனைத்து மக்களின் தாய் மொழி உரிமையைப் பாதுகாக்கும் வகையில், பிப்ரவரி 21ம் தேதியை சர்வதேச தாய்மொழி தினமாக யுனெஸ்கோ 1999ம் ஆண்டு அறிவித்தது. இதையடுத்து 2000ம் ஆண்டிலிருந்து, பிப்ரவரி 21ம் தேதி உலக தாய்மொழிகள் தினமாக கொண்டாடப்படுகிறது.
















# ஈஸ்வரா நாட்டிய கானாஞ்சலி - 2023



## சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம் பெருமையுடன் வழங்கிய கலை நிகழ்வு

மகா சிவராத்திரியைச் சிறப்பிக்கும் வகையில் கிழக்குப் பல்கலைக்கழக, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் நடன, நாடகத்துறை பெருமையுடன் வழங்கிய ''ஈஸ்வரா நாட்டிய கானாஞ்சலி - 2023'' நிகழ்வு மட்டக்களப்பில் கோலாகலமாக இடம்பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி திருமதி புளோரன்ஸ் பாரதி கென்னடி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வு கடந்த சனிக்கிழமை மாலை 7.00 மணி தொடக்கம் அதிகாலை 3.15 மணி வரை கலை, கலாசார நிகழ்வுகளுடன் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்விற்கு ஆன்மீக அதிதியாக தென்னிந்திய வேதாரண்யம் சிவன்தேவஸ்தான பரம்பரையைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய சந்திர விஸ்வயோகரமணி அவர்களும், பிரதம விருந்தினராக கொழும்பில் அமைந்துள்ள இந்திய உயர்ஸ்தானிக, சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அங்குரன் டட்டா அவர்களும், கௌரவ விருந்தினர்களாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலாளர் திருமதி. நவரூபரஞ்சனி முகுந்தன் அவர்களும், கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பித்த நிகழ்வில் வரவேற்புரையினை நடன, நாடகத்துறைத் தலைவர் கலாநிதி திருமதி தாக்ஷாயினி பரமதேவன் அவர்கள் ஆற்றியிருந்தார். அதனைத் தொடர்ந்து ஆசியுரையும், புஷ்பாஞ்சலி, சிவஸ்துதி, கீர்த்தனைகள், வர்ணம், நாட்டிய நாடகம், தில்லானா போன்ற பல்வேறு நடனங்கள் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து யாழ் இந்திய துணைத் தூதரகம் மற்றும், இந்திய கலாசார உறவுகளுக்கான பேராயம் (ICCR) ஆகியவற்றின் அனுசரணையில் இந்தியாவில் இருந்து வருகை தந்த கலாநிதி அருந்ததி பகவதீஸ்வர ஐயர் அவர்களின் இசைக்கச்சேரியும் இடம்பெற்றது.


இந் நிகழ்விற்கு பக்க வாத்தியக் கலைஞர்களாக வயலின் வைக்கியம், பத்மா கிருஷ்ணன் அவர்களும், மிருதங்கம் கலாநிதி ஜி.பாபு அவர்களும் கஞ்சிரா கடநாட அனந்த கிருஷ்ணன் அவர்களும் கடம் வாழப்பள்ளி கிருஷ்ணகுமார் அவர்களும் வருகை தந்திருந்தனர்.


இந்த நிகழ்வுகளில் கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டதுடன், இந்த நிகழ்வின் இணைப்பாளர்களாக நடன, நாடகத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ் அவர்களும் வாய்ப்பாட்டுப் போதனாசிரியர் சுரேந்திரா நரேந்திரா அவர்களும் இணைந்து செயற்பட்டிருந்ததுடன், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் அவர்களும் நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.















இளம் கலைஞர் அறிமுகம்
கு. கிலசன்

# இந்திய சினிமாவில் ஈழத்து கலைஞன் பாரதி மைந்தன்



யுத்த வடுக்களால் சூழ்ந்த தமிழ் உணர்வும் இயற்கை அழகும் நிறைந்த முல்லைத்தீவு மண்ணின் 8ம் வட்டாரம் மந்துவில் புதுக்குடியிருப்பு எனும் ஊரில் பிறந்து மன்னாரில் இடம் பெயர்வு காரணமாக வாழ்ந்து தற்போது மீண்டும் தனது சொந்த ஊரில் வாழ்ந்து வரும் எழுத்தாளர், கவிஞர் பாடலாசிரியர், சமூக சேவகர் என பல திறமைகளுடன் பயணித்துக் கொண்டிருபவர் பாரதி மைந்தன் எனும் புனைப்பெயர் கொண்ட அருள்தாஸ் கிளைம்சென்.

இவர் அருள்தாஸ் ஜெயசீனா தம்பதிகளுக்கு ஐந்தாவது பிள்ளை. அம்மா, அப்பா, அம்மம்மா, அம்மப்பா, மாமா, நான்கு அண்ணா, அவர்கள் துணைவியர் அத்தோடு சித்தப்பா, இவரை மகிழ்விக்க வந்த அண்ணாக்களின் ஐந்து மழலைகள் என்று அழகான அன்பை பகிரும் ஒரு நந்தவனம் இவருக்கு குடும்பம் என்று வரமாக கிடைத்தது.



இவர் தனது பாலர் கல்வியை பூண்டி மாதா பாலர் பாடசாலையில் கற்றதுடன் ஆரம்பக் கல்வி தொடக்கம் உயர்தர கல்வி வரை மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் அதிபர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லஸ் மற்றும் பாடசாலை ஆசிரியர்களின் அரவணைப்புடனும் தனது ஒழுக்கம் நிறை கல்வியை கற்றார்.

சிறு வயதில் இருந்தே மகிழ்வுடன் பயணித்து வந்த இவர் தனது இலட்சியம் நிறைந்த கல்வி பயணத்தில் கண்ட தடைகள் இவரை மிகவும் சோகத்தில் ஆழ்த்திய போதும் இவரின் குடும்பம் இவருக்கு கொடுத்த தன்னம்பிக்கை இவர் மனதில் ஒரு வெறியை உருவாக்கி தன்னால் அடைய முடியாததை அடைய வைக்க வேண்டும் என்ற வேட்கையுடன் தனது கிராமமான மந்துவில் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள மு/அரசரத்தினம் வித்தியாலயத்தில் ஆசிரியர் இல்லாத நிலையை உணர வைத்து அருட்சகோதரி மேரி றோசி அவர்களின் அழைப்பால் இலவசமாக மாணவர்களுக்கு 6 வருடங்கள் கற்பித்தல் பணியை மேற்கொண்ட இவர் மாணவர்களின் நலனுக்காக கற்பித்து வரும் பாடசாலையுடன் இணைத்து மு/புதுக்குடியிருப்பு றோ.க வித்தியாலயத்திலும் சாரண மாணவர்களை தனது சகோதரர் மற்றும் நண்பர்களின் உதவியுடன் தொடங்கி இன்று முல்லை மாவட்ட சாரண ஆணையாலம் அருட்திரு ஞானபொன்ராஜ் அவர்களின் உதவியுடனும் ஏனைய சாரண ஆசிரியர்களின் உதவியுடனும் மாணவர்களுக்கு சேவையாற்றி வருகின்றார்.

இவர் தமிழ் மீதும் சமூகத்தின் மீதும் கொண்ட அன்பினால் தனது வலிகள் நிறைந்த வாழ்வை வெளிச்சமாக்க எண்ணி தனது முதலாவது நூலான உணர்வுகளின் பாதை நூலை பல தடைகளை தாண்டி வெளியிட்ட போதிலும் பெரிதாக யாராலும் அறியப்படாதவராகவே இருந்தார். எனினும் தன் விடாமுயற்சியால் பலருக்கும் அறிந்தவராக மாறி தனது கனவுகளை தமிழ்த் தாயின் மகனாய் உலகத்திற்கு வரிகளால் கொடுத்து தனது அங்கீகாரத்தை இந்திய மண்ணில் பெற்றதுடன் இந்திய சினிமாவிலும் தமிழ் உலகிலும் தனது வரிகளால் மக்களை ஆட்சி செய்யும் கவிப்பேரரசு வைரமுத்து அவரின் அழைப்புடன் அவரின் இல்லத்தில் வைத்து சந்தித்து வாழ்த்தும் பெற்றவர் என்பதும் இவர் பயணத்தில் குறிப்பிடதக்க உயர்வாக அமைந்தது .



இவரின் கலைப் பயணம் இவர் கவலைகளை போக்கியதுடன் பல துரோகங்கள் ஏமாற்றங்களையும் இவருக்கு அனுபவமாக கொடுத்ததுடன் ஈழம் மற்றும் இந்தியா போன்ற பல நாடுகளிலும் இவருக்கு அன்பான உறவுகளை உருவாக்கி கொடுத்து இவரின் கலைப் பயண பாதைக்கு வித்திட்டதினுடாக இவர் துளிர் விடும் கனவுகள், சயனம் மறந்த பொழுதுகள் போன்ற கவிதை நூல்களையும் வெளியிட்டதுடன் நெஞ்சில் தீயே, கறுப்பு யூலை, காதல் சொல்ல வந்தேன் போன்ற பல பாடல்களையும் எழுதியதுடன் ரோஜாமுள், தாயாக ஆண் போன்ற குறுப் படங்களிலும் நடித்ததுடன் பட்டிமன்றம் கவியரங்கம் மற்றும் கவிதை போட்டிகளுக்கும் தலைமையாகவும் பயணித்து தனது திறமைகளை வளர்ப்பதுடன் புதிய கலைஞர்களையும் வளர்த்து வருவதை நாம் காண முடிகிறது.

இவர் 2022 இல் அரசால் நடைபெற்ற தேசிய இலக்கிய போட்டியில் செய்யுளாக்க போட்டியில் வெற்றியீட்டி சான்றிதழ் மற்றும் விருதை பெற்றதுடன் 2018 முல்லை மாவட்டத்தின் இளம் கலைஞருக்கான முல்லை இலக்கிய சுடர் விருது மற்றும் மரபு இலக்கண கல்வியை கற்று பரீட்சையில் சித்தியடைந்து மரபுப்பாமணி விருதையும் பெற்றதுடன் நூற்றுக்கு மேற்பட்ட விருதுகளை இந்தியா, இலங்கை, அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள குழுக்களால் நடைபெறும் போட்டிகளில் வெற்றியீட்டு பெற்றுள்ளமையும் குறிப்பிடதக்கது .

1130 கவிஞர்கள் இணைந்து உலக சாதனை புத்தகமாக வெளியீட்ட உலக சாதனை கவிதை நூலில் இவரின் பெயரும் சாதனை நூலில் பதியப்பட்டமை இவரது அடுத்த மைல்கல்லானது. இவரின் கனவாக இருந்த இந்திய சினிமாவில் பாடல் எழுத வேண்டும் என்ற ஆசை விரைவில் படப்பிடிப்பு ஆரம்பிக்கவுள்ள பேரினம் காக்கப்படும் எனும் திரைப்படத்தில் வரவுள்ளதும் கூறிப்பிடத்தக்கது.

இவர் கவிதையின் இனிமைகள் போலவே இவர் அன்பும் மரியாதையும் பலருக்கு குடும்ப உறவாக இவரை மாற்றியது . பல தடைகளை கண்டாலும் சாதிக்க வேண்டும் என்ற இவரின் தன்னம்பிக்கை தமிழ் தாயின் மீது இவர் கொண்ட காதல் இன்று சமூக பணிகளுடன் ஒன்றித்து கலை பயணத்திலும் நடை போட வைக்கிறது. இறக்கும் போது மண்ணாக மாறாமல் மக்கள் மனதில் இறந்தும் வாழும் நல்ல தமிழ் உறவாக வாழ வேண்டும் என்பதே இவரது இலக்கு எனலாம். பாரதி மைந்தன் எனும் கிளைம்சென் எனும் இளம் கலைஞரின் முயற்சிகள் பலித்து வெள்ளித்திரையிலும் உலகம் முழுதிலும் தமிழால் சாதிக்க எமது வாழ்த்துகள்.

சரித்திரப் பார்வை

சஞ்சீவி சிவகுமார்

# தமிழர்களின் இருப்பை வெளிப்படுத்தும் பெயர் 'மொறட்டுவை'

✍ சஞ்சீவி சிவகுமார்

பண்டைய சமூக வரலாறு என்பது அதன் நாட்டுப்புற இலக்கியத்தினூடு வெளிப்பட்டு நிற்பதை பல சந்தர்ப்பங்களில் அவதானிக்கின்றோம். இந்த வகையில் நாடோடிக் கதைகள் பல செய்திகளை தம்வசம் கொண்டிருக்கும் முக்கியமிக்க வரலாற்றிலக்கியக் கூறுகின்றன.

மொறட்டுவை நகரத்தின் பெயர் அமைவதற்குக் காரணமாக வழங்கப்படும் நாடோடிக்கதையொன்று இங்கு தமிழ் வழக்கு பழங்காலத்தில் எவ்வாறு புழக்கத்தில் இருந்தது என்பதைக் காட்டி நிற்கிறது.

முன்னொரு காலத்தில் கொழும்பு கோட்டையை அண்டிய பகுதியே குடியடர்த்திமிக்க பகுதியாக இருந்தது. சுற்றயல் பகுதிகள் காடுகளையும் சில இடங்களில் சேனைப் பயிர்ச்செய்கைக்குரிய பகுதிகளையும் கொண்டிருந்தன. பொதுவாக கோட்டை நகரத்தை அடைவதற்கு காட்டுப்பாதை ஊடாகவே பயணிக்க வேண்டிவரும். வாழ்வாதாரத்திற்கு மக்கள் அடிக்கடி காட்டுப் பகுதிக்கு சென்றுவர வேண்டி இருந்தது. காட்டை அண்டிய பகுதியிலேயே பயிர்ச்செய்கைக்குரிய சேனை நிலங்கள் காணப்பட்டன. நீர் வளங்கள் குறைவாக இருந்தமையால் சேனைப் பயிர்ச்செய்கையே பெரிதும் காணப்பட்டது. இந்த வகையில் காட்டுப் பகுதிக்கும் குடிமனைப் பகுதிக்குமான நெருக்கமான தொடர்புகள் காணப்பட்டன.



மொரட்டுவை

பண்டைக் காலத்தில் இருந்து கோட்டை இராச்சியத்தின் ஒரு பகுதியாக இருந்து வந்துள்ளது. தற்காலத்தில் சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்நகரத்தில் ஆரம்பமுதலே கணிசமான அளவு தமிழர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். ஒட்டுமொத்த இலங்கையின் ஆட்சி முறைமைகளையும் ஆராயும் போது பௌத்த ஆதிக்கத்தை பெற்றிருந்த போதிலும் சிங்கள மொழியின் உருவாக்கம் வரை நீண்ட காலப் பகுதிக்கு தமிழ்மொழி ஆட்சி மொழியாக இருந்துள்ளது. இதுவே, தமிழின் இந்த வியாபகத்திற்கு அடிப்படையான காரணமாகக் காணப்படுகின்றது.

தோட்டக்காவலர்கள்

காட்டு விலங்குகளிடமிருந்து தம்மையும் பயிர்களையும் காத்துக் கொள்ள உயர்ந்த மரங்களில் காவல் பரண்களை அமைத்து அதிலிருந்தபடி தீப்பந்தங்களை அசைத்தும், விசேட ஒலிகளை எழுப்பியும், கவண்களின் மூலம் அவற்றை அடித்தும் காவல் காக்கும் பணியை மேற்கொள்வர். இத்தகைய காவல்பணியை இரவுபகலாக செய்யவேண்டிவரும். போக்குவரத்து வசதி குறைந்த அக்காலத்தில் இவர்கள் தங்கியிருந்து வேலை பார்க்கும் நிலைமையே அதிகம் காணப்பட்டது.

அக்காலத்தில் கோட்டைப் பகுதியில் இருந்து தெற்கே அமைந்திருந்த பெரிய பரண்தோட்டம் பிரபலமாயிருந்தது. உயர்ந்த மரத்தில் அமைந்த பரண்வீடு இதில் காணப்பட்டது. அதில் வேலை பார்த்து வந்த காவலாளி அப்பகுதி மக்களால் பெரிதும் அறியப்பட்டிருந்தார்.



வீட்டிலிருந்து தோட்டத்திற்கு சென்றால் மாதக் கணக்கில் அங்கேயே தங்கியிருந்து காவல்வேலை பார்ப்பார். அக்காலப்பகுதியில் ஏறக்குறைய தனது முழு செயற்பாடுகளும் அந்தக் காவலாளிக்கு காவல் பரணிலேயே கழிந்தன. கொண்டு சென்ற உணவுப் பொருட்கள் முடிந்துவிட்டால் வீட்டுக்கு வந்து மாதத்திற்கான உணவுகளை சேகரித்துக்குக் கொண்டு மீண்டும் காட்டுக்குச் சென்றுவிடுவார். மாதாந்த பயணமாகவே பொதுவாக இது அமைந்திருக்கும்.

பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னர் கோட்டை இராட்சியமும் கம்பளை இராசதானியுடன் இணைந்ததாகவே காணப்பட்டது. ஆரியச்சக்கரவர்த்திகளிடமிருந்து கம்பளையைக் காப்பாற்றுவதற்காக தமிழ் நாட்டிலிருந்து அழகக்கோன் மரபினர் இங்கு வருகின்றனர். நிசங்க அழகக்கோன் எனப்பட்ட முதலாவது அழகக்கோன் இந்த மரபில் வந்த முதலாவது அரச பிரதானியாகக் காணப்படுகின்றான். அந்த மரபில் வந்த மூன்றாம் அழகக்கோன், ஆரியசக்கரவர்த்திகளின் ஊடுருவலைத் தடுப்பதற்காக தற்போதைய ஜெயவர்த்தனபுரக் கோட்டை அமைந்துள்ள இடத்தில் கோட்டையை அமைத்தான். அதன் பின் 1412களில் ஆறாம் பராக்கிரமபாகு கோட்டை இராசதானியை அதில் நிறுவுகின்றார். தமிழே ஆட்சி மொழியாகவும் புழங்கு மொழியாகவும் அக்காலத்தில் இருந்தது.

நாடோடிக் கதை பற்றி தொடங்கிய நான் இந்த பின்புலத்தை விபரித்தது, மொறட்டுவை அமைந்துள்ள கோட்டை இராசதானியில் தமிழரின் இருப்பை சுட்டிக் காட்டுவதற்காகும். மொறட்டுவை என்ற பெயர் எழுந்த வழிவாறை கூறும் நாடோடிக் கதை இதுதான்.

ஒருநாள் நகரம் முழுவதும் ஒரு பரபரப்பான செய்தி பரவியிருந்தது. பெரிய பரண் தோட்டத்தின் காவலாளி பரண் தீப்பிடித்ததில் உடல் முற்றுமுழுதுமாகக் கருகி இறந்து கிடப்பதான செய்தியே அது. ஊர் மக்களும் சொந்தங்களும் சேர்ந்து குறித்த இடத்திற்கு சென்று கருகிய உடலை கண்டெடுத்து நல்லடக்கம் செய்துவிட்டு வீடு திரும்பினர்.

பெரிய பரண் தோட்டத்தின் காவலாளியே இறந்து விட்டதாக அனைவரும் நம்பினர். ஆனால் உண்மையில் நடந்ததுவோ வேறு விதமாக இருந்தது. அன்றைய தினம் அவ்வழியே வந்த பிச்சைக்காரர் ஒருவர், மிகவும் இருட்டிவிட்டதால் பெரிய பரண் தோட்டத்தின் காவலாளியுடன் சென்று தங்கிவிட்டுக் காலையில் நகரத்தினுள் செல்ல விழைகிறார்.

காவல் பரணின் இருவரும் உறங்கும் வேளையில் வைக்கப்பட்டிருந்த தீப்பந்தம் தவறி விழுந்து பரண் தீப்பிடித்துள்ளது. காவலாளியின் ஆடை தீப்பிடிக்கத் தொடங்கியதும் அவற்றை உருவி எறிந்துவிட்டு பரணில் இருந்து கீழே பாய்ந்து காவலாளி உயிர்தப்பி விடுகிறார். வழிப்போக்கர் தீயில் முழுமையாகக் கருகிவிடுகிறார். பரணில் வைக்கப்பட்டிருந்த முழு ஆடைகளும் கருகிவிட்ட நிலையில் எந்தவொரு ஆடையுமின்றி வெளியில் வரமுடியாது காவலாளி காட்டில் மறைந்து நிற்கிறார். சொந்த பந்தங்கள் தோட்டத்திற்கு கூட்டமாக வந்தபோது வெட்கம் காரணமாக வெளிவராமல் மறைந்து விடுகிறார்.

இலைகுலைகளால் உடலை ஓரளவு மறைத்துக் கொண்டு நள்ளிரவுப்பொழுதில் வீட்டுக்கு வருகிறார். மரண வீடாக இருந்த அவ்வீட்டில் இவரது தோற்றத்தைக் கண்டதும் அனைவரும் அலறியடித்துக் கொண்டு ஓடுகின்றனர். வேறு வழியின்றி காட்டுக்கே திரும்பி விடுகிறார் காவல்காரர். மீண்டும் பரணமைத்து அங்கேயே தங்கும் நோக்குடன். பசியோ தங்க முடியவில்லை; ஆடையின்றி வெளிப்பட்டு தன்னிலையை சொல்லவும் முடியவில்லை.

அந்த வழியால் வந்தவர்களின் உணவுப் பொட்டலங்களை மறைந்திருந்து பறித்து உண்டு பசியைப் போக்கினார். பகலில் காட்டில் பதுங்கிக் கொண்டார். சந்தர்ப்பம் பார்த்து வழிப்போக்கர்களின் உணவுகளைத் திருடுவதுமாக வாழ்ந்தார். காட்டில் இவரின் நடமாட்டத்தின் சிலமன் குறித்து நகரில் பேச்சடிப்பட்டது.

இதனால் அவ்விடத்தில் காவல்காரரின் மொறட்டுப் பேய் உறைந்திருப்பதான செய்தி ஊரெல்லாம் பரவியது. மக்கள் காவல்பரண் பகுதியில் அச்சத்துடனேயே பயணித்தனர். **"மொறட்டுப்பேய் இடம்"** என்பது மருவி **"மொறட்டுப்பேய்"** என்றாகி பின்னர் **"மொறட்டுவை"** தோன்றியதாக இக்கதை தெரிவிக்கின்றது. இதுவே மொறட்டுவைக்குப் பெயராகியது.

இந்த நாடோடிக் கதை தமிழ் சார்ந்த மொழிச்சூழலில் பின்னப்பட்டிருப்பது தமிழ் மொழி இங்கு முக்கியம் பெற்றிருப்பதைக் காட்டிநிற்கின்றது. ஆயினும் மொறட்டுவ என்பது சிங்கள மொழியில் 'காவல் பரணை'க் குறிக்கும் சொல்லாகவும் அதனை அடியொற்றியே இப்பெயர் வழங்கப்படுவதாகவும் சில குறிப்புகளில் கூறப்படுகின்றது.

இந்த நாடோடிக் கதையிலும் காவல் பரண் மையமாக இருப்பதை நாம் கவனிக்க முடியும்.

# மட்டக்களப்பில் கொதித்தெழுந்த ஊடகர்கள்

## படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி போராட்டம்



வ.சக்திவேல்

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குங்குமாறு கோரி மட்டக்களப்பில் ஊடகவியலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அமைதியான முறையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது. மட்டக்களப்பு காந்தி பூங்கா அருகில் நடந்த இந்தப் போராட்டத்தில், கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், யாழ் ஊடக அமையம், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியம், வடக்கு கிழக்கு, தெற்கு ஊடக அமைப்புக்களின் பிரதிநிதிகள் பெருமளவில் கலந்து கொண்டனர். நாடாளுமன்ற உப்பினர் கோ.கருணாகரம், மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தி. சரவணபவன், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம், இ.பிரசன்னா, மற்றும் மதத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் பிரதிநிதிகள், உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

ஜனாதிபதிக்கு வழங்கி வைப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரனிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. இந்த மகஜரில் பல்வேறு விடயங்கள் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன.

வடக்கு – கிழக்கில் ஊடக சுதந்திரத்தை பேண தொடர்ந்து குரல் கொடுக்கின்ற அதேவேளை, கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடக நண்பர்களிற்கான சர்வதேச தலையீட்டின் கீழ் நீதி வழங்கப்பட வேண்டும். இதில் நாம் சமரசம் செய்துகொள்ள தயாராக இல்லையென தெரிவித்துக் கொள்கின்றோம்.






அதேவேளை, படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட வடக்கு, கிழக்கு ஊடகவியலாளரின் குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணமாக நட்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கில் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் கடந்த காலங்களில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளை கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், யாழ் ஊடக அமையம், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியம், வடக்கு கிழக்கு, தெற்கு ஊடக அமைப்புக்கள், தொடர்ச்சியாக கண்டித்தே வந்துள்ளன.

2000ம் ஆண்டில் BBC செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலையுடன் அரங்கேறிய ஊடகப் படுகொலைகள் நீண்டே சென்றிருந்தது. தமிழர் தாயகப் பகுதிகளில் பல ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பலர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. ஆனாலும், அந்த தாக்குதல்களுடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் கைதுசெய்யப்படவோ அல்லது சட்டத்தின் முன் நிறுத்தப்படவோ இல்லை என்பது அனைவரும் அறிந்ததொரு உண்மையாகும்.

வடக்கு – கிழக்கில் ஊடக சுதந்திரத்தை பேண நாம் தொடர்ந்து குரல் கொடுக்கின்ற அதேவேளை, கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடக நண்பர்களிற்கான சர்வதேச தலையீட்டின் கீழ் நீதி வழங்கப்பட வேண்டுமென மீண்டும் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

அதேவேளை, நல்லாட்சி காலத்தில் தாங்கள் பிரதமராக இருந்த காலப் பகுதியினில் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடக நண்பர்களது குடும்பங்களிற்கு இடைக்கால நிவாரணமாக இழப்பீடு ஒன்றை வழங்க முன்வந்து விசாரணை குழுவொன்றையும் அமைத்திருந்தீர்கள்.

குழுவும் விசாரணைகளை முன்னெடுத்த போதும், ஆட்சி மாற்றத்தின் பின்னராக அது கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

பின்னராக கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவ்வாறு விசாரணைக்குழுவே நியமிக்கப்பட்டிருக்கவில்லையென வாதிடப்பட்டிருந்தது.

எனினும், தற்போது தாங்கள் ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள நிலையில் தங்களால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைக் குழு பரிந்துரைகளின் பிரகாரம் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடகவியலாளர்களது குடும்பங்களிற்கான இடைக்கால நிவாரணத்தை வழங்குவதில் கவனத்தை செலுத்த கேட்டுக் கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.















சிறுகதை

# கோவிலூர் செல்வராஜனின் பூங்கொடி



நன்றி தினகரன் வாரமஞ்சரி

மனத்திற்குள் ஒருவித பயம் குடிகொண்டிருந்தாலும் அவளுக்குள் ஏதோவோர் இனம்புரியாத இன்பம், ஒரு குதூகலம் பிரவாகித்துக் கொண்டிருந்தது.

வீட்டில் வேலைகள் செய்கின்றாள், பிள்ளையைப் பராமரிக்கின்றாள். கணவனுக்கு பணிவிடைகள் செய்து, அவரை வேலைக்கு அனுப்புகின்றாள். ஆனால் இரண்டு நாட்களுக்கு முன்னர் வந்த டெலிபோனில் அந்த குரலைக் கேட்டு, மெய்மறந்துபோனவள் இன்னும் மீளவில்லை.

"ஹலோ பூங்கொடி எப்படி இருக்கிறீங்க" என்று அந்த போனில், மறுமுனையில் இருந்து கேட்ட குரல் அவளை வாயடைக்க வைத்துவிட்டது.

"ஹலோ பேசுங்க பூங்கொடி, உங்க போன் நம்பர்கள் சரிதான். உங்களை நன்றாக தெரிந்த ஒருவர்தான் தந்தார். சரி, பரவாயில்லை நான் மறுபடியும் பேசு கின்றேன்" என்று போனை வைக்கும் சத்தம் கேட்டு பூங்கொடி தன்னை சுதாகரித்துக் கொண்டாள்.

'அதே குரல். . எப்படி. ஏன் , எதற்காக, ஐயோ என்னவோ பண்ணுதே' என்று, இரண்டு நாட்களுக்குமுன் தொலைபேசி யை வைத்துவிட்டு அன்று முழுதும் தனக்குள் ஏற்பட்ட உணர்வுகளை உள்ளீர்த்துக் கொண்டாள்.

இரண்டு நாட்கள் கடந்துவிட்டன. அந்த ரெலிபோனுக்கு அருகில் வந்து நிற்கின்றாள். மணி அடித்தால் ஆர்வத்தோடு எடுத்து காதில் வைக்கின்றாள். அந்தக் குரலாக இருக்குமோ? என்று. ஆனால், அது வேறு ஒருவர். இப்படி அந்த டெலிபோன் அழைப்புக்காக அவள் காத்திருக்கிறாள்.

சரி, பூங்கொடி. அழகான பெயர் அல்லவா. யாரிவள். தாயகத்திலிருந்து அடிபாடுகளுக்கு மத்தியில் புலம்பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் பாரிஸ் நகருக்கு வந்தவள். இங்கு இரண்டு வருடங்களாக வசிக்கின்றாள். அக்கம்பக்கம், யாரைப் பார்த்தாலும் வெள்ளைத்தோல் நிறத்தவர் கள்தான். பேச்சுத் துணையே இல்லாமல் இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன. ஒரு பெண் பிள்ளை பிறந்தது . அதற்கும் இரண்டு வயதாகிறது. ஒரு தொடர்மாடிக் குடியிருப்பில் ஒரு படுக்கையறை, இருக்கையறை, சமையலறை, கழிப்பிடத் தோடு கூடிய குளியலறை இதுதான் அவள் குடியிருக்கும் வீடு.

தாயகத்தில் வன்னிப் பெருநிலத்தில் ஒரு செழிப்பான கிராமத்தில் பிறந்தவள் பூங்கொடி. ஓர் ஆசிரியையாக இருந்தவள். ஓரளவிற்குத் தமிழில், இலக்கியத்தில் அவளுக்கு அறிவு இருந்தது. தன் கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் ஆரம்ப வகுப்பில் பிள்ளைகளுக்குப் படிப்பு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அன்று தனிக்காட்டு ராஜாவாக, ஒரேயொரு ஒலிபரப்பு நிலையமாக இருந்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபனம் ஒலிபரப்பிய தரமான தமிழ் நிகழ்ச்சிகளை, நாடகங் களை, திரைப்படப் பாடல்களைக் கேட்டு, ஒரு வானொலி ரசிகையாகவும் இருந்தாள். அவ்வப்போது அவள் ஒரு சில சஞ்சிகை நிகழ்சிகளுக்கு தனது ஆக்கங்களை எழுதி அனுப்பி, அது ஒலிபரப்பப்படும்போது கேட்டு ரசித்தவள். பலரையும் கேட்கும்படி செய்து மகிழ்ந்தவள். அவைகள் ஒலிபரப்ப காரணமாக இருந்தவர் ஒருவர் இருக்கிறார்.

பூங்கொடிக்கு ஒரு சகோதரி, இரண்டு சகோதரர்கள். மூத்த சகோதரி திருமணமாகி வடக்கில் வடமராட்சியில் வசிக்கிறாள். மூத்த சகோதரன் திருமணமாகி முல்லைத் தீவில் வசிக்கின்றார். பூங்கொடியும், தனது இளைய சகோதரனும்தான் வன்னியில் பெற்றொருடன் வசித்து வந்தார்கள்.

பூங்கொடியின் தகப்பனார் ஒரு விவசாயி. நிறைய நிலபுலங்கள் இருந்தன. நெல் சாகு படியும், மேட்டுநிலப் பயிர்களும் விளை வித்தார். ஆனால் போர்ச்சூழல் வந்தபோது எல்லோரது இயல்பு வாழ்க்கையும் பாதிக் கப்படதல்லவா. பூங்கொடியின் வீட்டிலும் அந்த பாதிப்பு இருந்தது.

பூங்கொடி எப்போதாவது இருந்துவிட்டு அக்காவீட்டுக்கு பருத்தித்துறைக்குச் செல்வ துண்டு.

பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டால் ஓரிரு தினங்கள் அக்காவீட்டிலும் தங்குவ துண்டு. ஒருமுறை பூங்கொடி, தன் அக்கா குழந்தையின் முதலாவது பிறந்தநாள் கொண்டாட்டத்திற்குப் பருத்தித்துறை சென்றாள். வல்வெட்டி, கரவெட்டி, கரணவாய், துன்னாலை ஆகிய கிராமங்களி லிருந்தும் பூங்கொடியின் அக்கா கணவரின் உறவுகள் வந்திருந்தார்கள். அவர்கள் வீட் டுக்குப் பக்கத்தில் உள்ள சனசமூக நிலைய மண்டபத்தில்தான் பிறந்தநாள் விழா நடக்க ஏற்பாடு செய்யப்பட்டு ஒழுங்குகள் நடைபெற்றன.

பூங்கொடி இப்படியான நிகழ்வுகளை முன்னெடுத்து செய்வதில் மிக விருப்புடை யவள். ஆரவாரத்துடன் எல்லா வேலை களையும் தானே எடுத்துச் செய்வாள். பலரும் அவளின் ஆற்றலைப் பாராட்டிப் பேசுவார்கள். அன்றும் அவள் அந்த பிறந்தநாள் கொண்டாட்டத்தில் தன் கைவரிசையை காட்டினாள். கொழும்பிலிருந்தும் பூங்கொடியின் அத்தான் புலேந்திரனுக்கு தெரிந்த நண்பர்கள் இருவர் வந்திருந்தார்கள்.

அவர்களில் ஒருவர் இளைஞர் லட்சண மாகவும் இருந்தார். கலகலப்பாக எல்லோரு டனும் பேசிக்கொண்டிருந்தார். பூங்கொடி அந்த இளைஞனின் பேச்சை செவிமடுத்துக் கொண்டும் அவனை ஓரப்பார்வையால் பார்த்துக் கொண்டும் இருந்தாள். பிறந்தநாள் விழா மண்டபத்தில்குழந்தைக்குப் பிறந்த நாள் பாட்டெல்லாம் பாடி, கேக் வெட்டி எல்லாம் முடிந்தபின் நிகழ்சிகள் சில நடந்தன. அப்பொழுது பூங்கொடியின் அத்தான் மைக்கை எடுத்து பேசினார்.

"இப்பொழுது நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த பாட்டுக்கு, எசைப்பாட்டு நடைபெறும். இதை நடத்த அன்பு சகோதரர் வினோத்தை அழைக்கின்றேன்" என்றார்.

அந்த வினோத் வேறு யாருமல்ல பூங்கொடி கண்வைத்த இளைஞன்தான். வினோத் தனக்கே உரிய பாணியில் நிகழ்ச் சியை கலகலப்பாகத் தொடங்கினான். கூட்டத்திலிருந்த ஆண்களும் பெண்களும் வந்து ஆளாளுக்கு பாட்டும் அதற்கு எசைப்பாட்டும் பாடி மகிழ்வித்தார்கள். முடிவில் பூங்கொடி நல்லா பாடுவாள் என்று அவளின் அக்கா சொல்ல. மைக்கில் வினோத் பூங்கொடியை அடுத்துப் பாட அழைத்தான். பூங்கொடி ஒருவித பதட் டத்தோடு சென்றாள்.

"வணக்கம் பூங்கொடி. என்ன பாட்டுப் பாடப் போகின்றீர்கள்?" என்று அவன் கேட்டதும், பூங்கொடி, "அது.. வந்து.. அது.. வந்து.." என்று தடுமாறினாள்.

உடனே அவன் அவளைக் கிண்டல் பண்ண, "சரி இப்பொழுது பூங்கொடி, அது வந்து அது வந்து" என்ற பாடலை பாடுவார் கேட்டு மகிழ்வோம்' என்றான் பூங்கொடி, உடனே "இல்லை இல்லை. . நான் சொல்ல வந்தது"

"நீங்க ஒன்றும் சொல்லவேண்டாம். உங்களுக்கு விருப்பமான பாடலை பாட லாம். எங்கே எல்லோரும் பூங்கொடிக்கு ஒரு முழுமையான கரவொலி கொடுங்கள்" என்று கேட்க மண்டபம் நிறைந்த கரவொலி கேட்டு ஓய்ந்தது.

பூங்கொடி எந்த தயக்கமுமின்றி பாடினாள். "உன்னை நான் சந்தித்தேன் நீ ஆயிரத்தில் ஒருவன். . என்னை நான் கொடுத்தேன் என் ஆலயத்தில் இறைவன்" என்ற பாடலை மிக இனிமையாகப் பாடி முடித்தாள். மண்டபம் நிறைந்த கரகோசம் கிடைத்தது. அவளின் அக்கா வந்து அவளை கட்டி அணைத்துப் பாராட்டினாள். அந்தப் பாட்டுக்கு எசைப்பாட்டுப் பாட ஒருவரும் வரவில்லை.

எல்லோரும் வினோத் நீங்கள்தான் பாட வேண்டும் என்று கூச்சலிட, "ஓகே நானே பாடுகின்றேன்" என்று சொல்லி பாடினான் வினோத். "ஒரு பெண்ணைப் பார்த்து நிலவைப் பார்த்தேன் நிலவில் ஒளியில்லை. அவள் கண்ணைப்பார்த்து மலரைப் பார்த்தேன் மலரில் மணமில்லை" என்ற பாடலை அவன் பூங்கொடியை பார்த்தே பாட, பெரிய கைதட்டல் கேட்டது. மிக அருமையாக அங்க அசைவுகளோடு அவன் பாட அனைவரும் ஆரவாரம் செய்து அவனை மகிழ்வித்தார்கள். பூங்கொடியும் நாணி தலை குனிந்தாள்.

பிறந்தநாள் விழா இனிதே நிறைவு பெற, எல்லோரும் மாலை ஆறு மணிக்கு முதல் தங்களின் ஊர்களுக்கு செல்ல வேண்டிய கட்டாயம் இருந்ததால், புலேந்திரன் குடும் பத்திடம் விடை பெற்றுச் சென்றார்கள்.

கொழும்பிலிருந்து வந்த இருவரும், அதில் வினோத் ஒருவர், பூங்கொடியின் அக்கா வீட்டில்தான் அன்று இரவு தங்கி விட்டு அடுத்தநாள் அவர்கள் பயணம் செய்ய வேண்டும். ஆதலால் மண்டபத்தில் எல்லா வேலைகளும் முடிந்தபின் அவர்கள் பூங்கொடியின் அக்கா வீட்டுக்கு வந்தார்கள். எல்லோரும் களைப்படைந்திருந்தார்கள். வினோத்தும், அவரோடு வந்திருந்த குமரேசன் அவர்களும் பூங்கொடியின் அத்தான் புலேந்திரன் அவர்களும் வீட்டின் மண்டபத்தில் அமர்ந்திருந்தார்கள்.

சற்று நேர மௌனத்தின் பின்னர் புலேந் திரன் அவர்களை பார்த்துப் பேசினார்.

"எல்லோரும் களைப்படைந்து விட்டோம் இல்லையா வினோத்" என்றார்.

"அவ்வளவு களைப்பென்று இல்லை. என்றாலும் ஒரு பொடி வோஸ் எடுத்தால் பிரெஸ் ஆகிடலாம்" என்றான்.

"கண்டிப்பாக. வாங்க மூவரும் கிணற்றடிக்குச் சென்று குளித்துவிட்டு வருவோம்" என்ற புலேந்திரன் அறைக்குள் சென்று அவர்களுக்கு சோப், டவல் எல்லாம் எடுத்துவந்தார்.

அதைப் பார்த்த வினோத், "வேண்டாம். எல்லாம் எங்களிடம் இருக்கின்றன" என்று தங்களுக்குத் தரப்பட்ட அறைக்குள் சென்று அனைத்தையும் எடுத்துக் கொண்டு கிணற் றடிக்குச் சென்றான். கிணற்று தண்ணீரில் குளிப்பதில் அவனுக்கு மிகுந்த ஆவல். கொழும்பில் குளியறையில் குளித்துப் பழகிவிட்டான். என்றாலும் அவன் விடுப்பில் ஊர் செல்லும்போதெல்லாம் வீட்டில் கிணற்றடியில்தானே குளிப்பான். அதனால் இங்கு குளிப்பதில் அவனுக்குச் சந்தோசம். தகர வேலி அடைத்திருந்தாலும் சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டே அவன் மற்றவர்களுடன் குளித்தான். யாராவது வந்து பார்த்து விடுவார்களோ என்று தகர வேலிக்கு மேலால் எட்டிப் பார்த்துக் கொண்டே குளித்து முடித்தான். அப்படி ஒன்றும் ஆகவில்லை. இப்போ எல்லோரும் பிரெஷ்ஷாயிட்டாங்க. ஹாலில் அமர்ந்திருந்தார்கள். புலேந்திரன் அறையிலிருந்து வந்து பேசினார்.

"ஓகே விடிந்தால் நீங்கள் புறப்பட்டு விடுவீர்கள். அதனால் இப்போ கொஞ்சம் சந்தோசமாக இருப்போமே. வினோத் ஒன்றும் பாவிக்க மாட்டார். நானும் நீங் களும் தான் எடுக்கவேண்டும் என்று குமரேசனை தட்டினார் புலேந்திரன்.

"ஓ அதுக்கென்ன எடுப்பமே என்றார்" குமரேசன் புலேந்திரன் சென்று ஒரு மென்டிஸ் போத்தலும், இரண்டு கிளாசும் கொண்டு வந்தார்.

அதை டீபோயில் வைத்துவிட்டு, குசினிக்குள் சென்று பிறிச்சில் இருந்த கொக்கோலா போத்தலையும் கொண்டு வந்து வைத்தார். பிறகென்ன சமா தொடங்கியது.

தொடரும்...

# சிறுகதை

14 ஆம் பக்க தொடர்ச்சி...

பூங்கொடியின் அக்கா சமையலறைக்குள் நின்று இரவுச் சாப்பாடு தயார் பண்ணிக் கொண்டு இருந்தாள்.

பூங்கொடி அறையில் குழந்தையை வைத்திருந்தவள் அது உறங்கியதும், தொட்டிலில் படுக்கவைத்துவிட்டு குசினிக்குள் வந்தாள். அவளைக் கண்டதும் அக்கா கேட்டாள். ‘என்ன, பிள்ளை தூங்கிற்றாளோ’

‘ம், இப்பதான் தூங்கினாள், சரி நீங்க என்ன எல்லாம் முடிச்சிட்டீங்களா? நான் ஏதாவது செய்யணுமா?’

‘எல்லாம் முடிந்த மாதிரிதான். நீ, அந்த சம்பலுக்கு மட்டும் கொஞ்சம் புளியை விட்டு பிசைந்துவிடு. எலுமிச்சை வெட்டின பாதி. பிறிச்சில் இருக்கு’ என்றவள், குழல் புட்டை எடுத்து ஹாட் பாக்கில் இறக்கி மூடினாள்.

‘அக்கா, அத்தானுக்கு எப்படி பழக்கம் இவர்கள்’ என்று கேட்டாள் பூங்கொடி.

‘இவர் கொழும்பில் வேலை செய்த நேரம், அந்த முருகேசன் இவரோடதான் வேலைசெய்தவராம். வினோத், முருகேசனுக்கு தெரிந்த பெடியன். மீடியாவில் வேலை. எழுத்து, பாட்டு, பத்திரிகை, வானொலி என்று மிக அசத்தல் பேர்வழி. நாமும் இண்டைக்கு பார்த்தோம்தானே. எப்படி நிகழ்ச்சியை கலகலப்பாக செய்தார் என்று. உன்னையும் கிண்டல் அடித்தாரே . . அதை எல்லோரும் ரசித்தோம்’

‘அக்கா, போங்க நீங்க, அது எனக்கு வெட்கமா போயிற்று. நான் எப்படிப் பாடினேன் என்று தெரியல்ல. அவ்வளவு பதட்டமாக ஆரம்பத்தில் இருந்தது. பிறகு சரியாயிட்டு. அதனால் நன்றாக பாட முடிந்தது’

‘சூப்பரா பாடினாய் பூங்கொடி. எல்லோருக்கும் நல்லா பிடிச்சிருந்தது. உனக்கு எசப்பாட்டுப் பாடிய வினோத். . ஆகா என்னத்த சொல்ல. அசத்தலோ அசத்தல். அதுவும் உன்னைப் பார்த்துப் பாடிய விதமிருக்கே. . அய்யய்யோ . . சொல்லி வேலையில்லை’

‘அக்கா என்னக்கா நீங்க’ என்று சிணுங்கினாலும் அவளுக்குள் உள்ளூர என்னவோ செய்தது. வினோத்தை பார்த்தது, அவன் பேச்சைக் கேட்டது. அதிலிருந்து விடுபட முன்னரே விழாவில் அவன் பாடியது எல்லாம் பூங்கொடிக்கு ஏதோ ஒரு உள்ளுணர்வை கொடுத்தது.

நேரம் ஆகியதால், புலேந்திரன் குரல் கொடுத்தார். சாப்பாட்டு மேசையில் உணவுகளைக் கொண்டு பூங்கொடியின் அக்கா வைத்தார். பூங்கொடியும் உதவினாள். ஹாலுக்கு வரும்போது வினோத்தை கடைக்கண்ணால் அவள் பார்க்கத் தவறவில்லை. அவனும் அவளைப் பார்த்து சிரித்தான். அது அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

சாப்பிட்டு முடித்து படுக்கப் போகும் முன்னர் கொஞ்சநேரம் ஹாலில் அமர்ந்திருந்தார்கள்.

அப்பொழுது பார்வையாலேயே பேசிக் கொண்டு இருந்தவர்கள், ஒரு கட்டத்தில் நேரடியாக பேசவேண்டி வந்தது. வினோத் சொன்னான்.

‘நல்ல குரல் உங்களுக்கு. நல்லா வேற பாடுறீங்க. சங்கீதம் முறைப்படி கற்றுக்கொண்டு இருக்கிறீர்களா?’

‘இல்லை. சும்மா நான் எனக்குப் பிடித்த பாட்டை பாடுவேன். ரேடியோவில் கேட்டு அதை பாடிப் பார்ப்பேன் அவ்வளவுதான்’ என்று தட்டுத்தடுமாறி சொல்லிவிட்டாள்.

‘கேள்வி ஞானம் என்றாலும் மிக அருமை’ என்று அவன் பாராட்டியதை அவள் விரும்பினாள்.

படுக்கைக்குச் சென்றார்கள். பூங்கொடியால் தூங்க முடியவில்லை. நித்திரை வராமல் புரண்டு பிரண்டு படுத்தாள். எப்படியோ ஒரு விதமாக விடிந்து விட்டது. அவள் கிணற்றடிக்குச் சென்று திரும்பும்போது, எதிர் திசையில் வினோத் வந்தான்.

‘மோனிங் பூங்கொடி’ என்றான்.

‘மோனிங்’ என்று பதில் சொன்னவளைப் பார்த்து ‘என்ன தூக்கமில்லைப் போல் தெரிகிறது’ என்றான்.

அவள் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, இல்லையே நான் நன்றாகத்தான் தூங்கினேன். அது சரி உங்களுக்கு எப்படித் தெரியும் நீங்களும் தூங்கவில்லையோ’ கேட்டாள்.

அவன் சிரித்து கொண்டே பதில் சொன்னான். ‘ஆம் என்னாலும் தூங்க முடியவில்லை. நான் பொய் சொல்லமாட்டேன். ஏன்தெரியுமா?

புது இடம், அதோட நுளம்பு தொல்லையும் இருந்தது’ என்றவன் பூங்கொடி முகத்தைப் பார்த்தான்.

அது பொலிவிழந்து போய்க்கொண்டிருந்தது. ‘இல்லையில்லை, அது இல்லை காரணம்’

‘பின்ன வேற என்னவாம்?’

‘எல்லாம் உன்னால்தான். நீர்தான் என்னை தூங்கவிடாமல் படுத்திவிட்டாய்’ என்றதும் பூங்கொடிக்கு ஆயிரம் வோல்ட்ஸ் மின்சார வெளிச்சம் முகத்தில். அவள் முகம் சிவக்க சிவக்க ஓடிவிட்டாள். அவள் இதயத்தில் ஒரு இன்பக் கிளுகிளுப்பு எழுந்தது.

மனத்துக்குள் ஒரு வேதனையும் எட்டிப் பார்த்தது. அவன் போகப்போகின்றானே என்ற கவலையது. புறப்படத் தயாரானபோது, அவன் கேட்டான்.

‘பூங்கொடி நீங்க பாடுவதைவிட நன்றாக எழுதுவீங்களாமே. இலக்கியம், கவிதை, பாடல், கட்டுரை கதைகள் எது வேண்டுமானாலும் எழுதி அனுப்புங்கள். என்று தனது முகவரி காட்டைக் கொடுத்தான். அனைவருக்கும் நன்றி சொல்லி முருகேசனுடன் அவன் கொழும்புக்குப் புறப்பட்டான்.

அதன்பின் நாட்கள் நகர்ந்தன. பூங்கொடி பல ஆக்கங்களை எழுதி அனுப்பினாள்.

அவற்றை, வானொலி, பத்திரிகைகளில் ஒலிபரப்பவும், வெளிவரச் செய்யவும் உதவினான் வினோத். இருவரும் மாறி மாறி மடல்கள் எழுதிக் கொண்டே இருந்தார்கள். பூங்கொடி வானொலிக்கு பக்கத்தில் இருந்தே அதிக நேரத்தைச் செலவிடத் தொடங்கினாள். இவள் எழுதிய பிரதிகள், இன்றைய நேயர், பூவும்பொட்டும், மங்கையர்மஞ்சரி, இசையும் கதையும் போன்ற நிகழ்சிகளை அலங்கரித்தன. வீட்டிலும், கிராமத்திலும் நல்ல பாராட்டுகள் கிடைத்தன.

அவள் மகிழ்ச்சியாக இருந்த நாட்கள் அவை. கடிதங்கள் அடிக்கடி வரும். வினோத் எழுதுவான். பூங்கொடியின் எழுத்து அவனுக்குப் பிடித்திருந்தது. அதில் காதல் என்பதையும் தாண்டி, தமிழும், இலக்கியமும் இருக்கும். அதனால் அவனும் எழுதுவான். ஊர் தபால்காரர் அவளிடம் சொல்லுவார். ‘தங்கச்சி உங்களுக்குத்தான் எல்லாக் கடிதமும் வருகுது’ என்று. பூங்கொடியின் தந்தை கண்டிப்பானவர்.

அவருக்கு, ஆண்களோடு பேசுவது கடிதத்தொடர்பு வைத்திருப்பது எல்லாம் பிடிக்காத விடயமாக இருந்தது. அந்தக்கால தகப்பன்மார்கள் அப்படிதானே இருப்பார்கள். ஒருமுறை அவர் கண்டித்தார். அதனால் பூங்கொடி தபால்காரரிடம் சொல்லி வைத்தாள், தனக்கு வரும் கடிதங்களை தன்னிடமே தரவேண்டும் என்று. அவரும் பக்கத்து வீடு என்பதால், பூங்கொடியைக் காணும்போது கொடுப்பார். அவளும் அவருக்கு நன்றி சொல்லி பெற்றுக்கொண்டு பதில் எழுதுவாள். பசி, தூக்கம் மறந்த நாட்கள் ஏராளம். ஆசிரியையாக இருந்ததால், தன் வேலையிலும் ஈடுபாடு கொண்டிருந்தாள். காலங்கள் விரைந்தோடின. கலவரங்கள் நடைபெற்றுகொண்டிருந்த நேரங்கள்.

மக்களின் இயல்பு வாழ்க்கை இல்லாமல்போன நாட்கள். ஒரு ஞாயிற்றுக்கிழமை அவளின் ஒரு சகோதரன் முறையான ஒருவன் வந்து சொன்னான். உங்களைத்தேடி வினோத் என்று ஒருவர் வந்திருக்கிறார்’ என்று. அவள் மனம் மகிழ்ச்சியில் திளைத்தாலும் கவலையும் கொண்டாள். இந்த நேரத்தில், அதுவும் மாலையாகிவிட்ட நேரம்.

எப்படி இவர் திடீர் என்று. அவள் யோசித்தாள். அவரை, அவளது உறவுக்காரர் கவனித்துக் கொண்டார்கள். அக்காவின் வீடு என்றால் பரவாயில்லை. இது என் கிராமம் அல்லவா. அவளுக்கு எப்போது விடியும் என்று இருந்தது. விடிந்தது. அவள் அன்று பாடசாலை போகவில்லை. அவள் தந்தை டவுனுக்குப் போனபின் அவனுக்கு அவள் அழைப்பு கொடுத்து வீட்டுக்குக் கூப்பிட்டாள்.

வீட்டில் உள்ளவர்கள் யாரும் அதைப் பெரிதாக எடுக்கவில்லை, அவள் அன்பின் நிமித்தம் அவனோடு பேசினாள்.

‘என்ன சொல்லாமல் கொள்ளாமல் வந்திருக்கிறீங்க, அதுவும் இந்த நேரத்தில்? என்றாள்.

‘நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தேன் ஓர் அலுவலாக. அந்த வேலை முடிய நேரமாயிற்று. சரி கொழும்புக்கு செல்ல முன்னர்,

வவுனியாவில் மற்றுமொரு வேலை. அதுதான் வந்தேன். சரி இவ்வளவு தூரம் வந்தனான் பக்கத்தில் இருக்கும் உங்களையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன் பூங்கொடி’ என்றான் வினோத்.

அவள் அன்பாக அவனோடு பேசிக்கொண்டு இருந்த போது, அவளின் அப்பா வருவது பற்றிய தகவலை, தம்பி வந்து சொல்ல, வினோத்தும் பின்பக்க வேலியால் பாய்ந்து வெளியேறிவிட்டான். அது அவனுக்கு மிக சங்கடமான தருணமாக இருந்தது. தான் வந்திருக்கக் கூடாது என்று அப்போதுதான் நினைத்தான். பூங்கொடிக்கும் அது மறக்கமுடியாத சம்பவமாக போய்விட்டது. அவன் வந்து சென்று பல நாட்கள் ஆகிவிட்டன.

அவளின் இதயமும் வேதனைக் கடலில் மூழ்கியது. தொடர்புகள் இல்லாமல் போனது.

ஒருநாள் ஒரு கடிதம் அவளுக்கு வந்தது. அதில், மன்னித்து விடு பூங்கொடி. உன்னுடைய மனத்தை நான் குழப்பிவிட்டேன். உன்னை மிகவும் வேதனைப் படுத்திவிட்டேன். என்னை மன்னித்துவிடு. வினோத் ஒரு சில காரணங்களையும் சொல்லியிருந்தான். அவற்றை அவளால் ஏற்றுக்கொள்ள முடிந்ததா என்று தெரியவில்லை.

பூங்கொடி தன்னிலை மறந்தாள். கண்ணீர்த்துளிகள் அவள் தலையணையை நனைத்தன. தன்னையே கவனிக்க மறந்தாள். நடைப்பிணமாக நடந்தாள். காலம் உருண்டன. அவள் அறிந்தாள். அவனுக்கு திருமணம் நிச்சயம் ஆகி இருக்கிறதாம் என்று. அப்போது அவள் கவலைப்படவில்லை. என் வசந்தகால கனவுகள் அத்தனையும் புயலால் அடித்துச் செல்லப்பட்டதே. . . போகட்டும் என்று இருந்தாள். அவள் அண்ணியோ, விடு பூங்கொடி, எல்லாம் உனக்கு நல்லதுக்குதான். என்று சொல்லி, பூங்கொடி சேர்த்து வைத்திருந்த கடிதங்கள், படங்கள் எல்லாவற்றையும் தீயில் போட்டு கொளுத்தி விட்டாள். பூங்கொடியின் மனசும் பற்றி எரிந்துகொண்டதை அந்த பகவான் மட்டுமே அறிவார்.

நாட்கள் நகர்ந்தன. பூங்கொடியின் அன்பைப் பெற பலர் யாசித்தார்கள். ஆனால் யாராலும் அவளை நெருங்க முடியவில்லை. கலவரங்கள் தொடர, அவள் சொந்தங்களும் புலம்பெயர்ந்து சென்றார்கள். இடையில் தந்தை, தாயைப் பிரிந்ததும் அவளை வாட்டியது.

அவள் சகோதரன் அவளை பாரிசுக்கு அழைக்க விரும்பினான். அவளும் தன் வேலையையும் விட்டுப் பாரிசுக்கு வந்து விட்டாள். மாற்றம் ஒன்று அவளுக்கு தேவைப்பட்டது. அது கிடைத்தது. இங்கு வந்த பின் பூங்கொடிக்குத் திருமணம் ஒன்று பேசி முடிக்கப்பட்டது. பின்னர் குழந்தை பிறந்தது. நல்ல வாழ்க்கை அவளுக்கு கிடைத்தது. இருந்தாலும் வினோத் அடிக்கடி அவள் நினைவுகளில் வந்து போவான்.

இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. இன்னும் பூங்கொடி ஊர் நினைவுகளை மறக்கவில்லை. முகநூல் வழியாக வினோத் டென்மார்க்கில் இருப்பதாக அறிந்து கொண்டிருந்தாள். ஆனால் அவனுடன் பேசவோ, தொடர்பு கொள்ளவோ முயற்சிக்கவில்லை. ஆனால் இரண்டு நாட்களுக்கு முன் அவள் போனில் கேட்ட குரல், அது வினோத் குரல்தான்.

அவன்தான் சொன்னானே . . பூங்கொடி இது உங்கள் நம்பர்தான் என்று. ஏன் நான் பேசவில்லை. . எனக்கு என்ன ஆயிற்று. பேசியிருக்கலாம்தானே. வினோத் என்ன நினைத்திருப்பார். சே. . இப்ப போன் மணி அடித்தால் அது அவராக இருக்குமோ என்று ஏன் என் மனம் பதறுகின்றது. அவள் அப்படி நினைக்கும் போது மீண்டும் அவள் போன் ஒலிக்கிறது. அவள் அதே பதட்டத்துடன் ஓடிப்போய் எடுக்கிறாள். மறுமுனையில் வேறு ஒருவர். பூங்கொடியின் மனசு துவண்டு போகிறது.

இந்தப் புலம் பெயர் நாட்டில் பேசுவதற்குக் கூட மனிதர்களுக்கு நேரம் கிடைப்பதில்லைபோலும். அன்று வினோத் நான் மறுபடி பேசுகின்றேன் என்று சொல்லித்தானே போனை வைத்தார். சே. நான் எப்படி இருக்கிறீங்க என்றாவது கேட்டிருக்கலாமே என்று தன்னை நொந்து கொண்டாள் பூங்கொடி.

அடுத்த சில தினங்களில் வினோத் அவளுடன் பேசினான். அவளும் பேசினாள். அவளிடம் பதட்டம் இல்லை. மனது பக்குவப் பட்டு இருந்தது. எல்லோரும் நன்றாக இருப்பதில் அவளுக்கு மகிழ்ச்சி. அவனிடம் கோபப்பட காரணம் இல்லை. அத்தனை அனுபவங்களைப் பெற்றுவிட்ட ஒரு பெண். ஒரு தாய் அவள். தன்னைத்தாரமாக்கி தாய் என்ற மகத்துவத்தை அவளுக்கு அளித்து எந்தக் குறையுமின்றி பார்த்துவரும் ஓர் அன்பான கணவன். அவள் கொடுத்து வைத்தவள் என்று பேசிக்கொள்கிறார்கள்.

பூங்கொடிக்கு மட்டும் எதையோ தொலைத்துவிட்டு வாழ்வதுபோன்ற நினைப்பு. முதல் பரிசு பெற்ற சிறுகதை நூல் தொகுப்பின் அட்டைப் படத்திற்கு உணர்வோடு வரையப்பட்ட ஓவியம் போல்.

# சூரிய நமஸ்காரம்

கலாபூசணம்
யோகாசன கலாநிதி கா.சந்திரலிங்கம்

இவ்வாசனத்தை உலகுக்கு கொடுத்த மகாமுனிவரான மத்சூரிய நமஸ்காரம்.

சூரிய உதயத்தின் போதும் சூரியன் மறையும்போது இதனைச் செய்வது பொருத்தமாக இருக்கும். யோகாச னம் செய்வதற்கு முன்னர் இப்பயிற்சியினை செய்வதால் யோகாசனங்களை இலகுவாக செய்யக்கூடியதாக உடல் வளைந்து கொடுக்கும்

சூரிய நமஸ்காரமானது பிராணாயாமம், ஆசனங்கள் இரண்டையும் இணைப்பதாக அமைந்துள்ளமை அதன் சிறப்பம்சமாகும். சூரியனின் அளப்பெரும் ச க்தியினைப் பெற்று ஆரோக்கியமாக மன அமைதியுடன் வாழ சூரிய நமஸ்காரம் உதவுகின்றது. உடலில் உள்ள சகல உறுப்புகளுக்கும் புத்துணர்ச்சி கொடுக்க வல்ல இப்பயிற்சியினை ஆண் பெண் இருபாலரும் செய்யலாம். உடல், மனம், மூச்சு மூன்றின் செயற்பாடு களையும் சீராக்கும் பயிற்சியான இப் பயிற்சியினை 10 படிமுறைகளாகவோ அல்லது 12 படிமுறைகளாகவும் செய்யலாம். கீழே காணப்படும் மந்திரத்தை சொல்லி சூரிய நமஸ்காரம் செய்வதால் சூரியனுடைய சக்தி மிக இலகுவாக கிடைக்க அது வழிவகுக்கும்.

**"ஹிரண்மயேன பாத்ரேண**
**ஸத்ய ஸ்யா பி ஹிதம் முகம்**
**தத்த்வம் பூஷன்ன பாவ்ருணு**
**ஸத்ய தர்மாய த்ருஷ்டயே"**

இதன் பொருள் சத்தியம் என்னும் பாத்திரம் தங்கமயமான மூடியால் மூடப்பட்டிருக்கின்றது. சூரிய பகவானே அருள் பாலித்து அம்மூடியை திறந்து உண்மை நிலைக்கு வழி காட்டுவாயாக என்பதேயாகும்.

ஒவ்வொரு சுற்றும் செய்யும்போது சூரிய பகவானுடைய நாமத்தை ஓம்காரத்துடன் இணைத்து சுவாசத்தை சரியான ஒழுங்குடன் செய்யவும்.

**ஓம் ஹ்ராம் மித்ராய நமஹ**
**ஓம் ஹ்ரீம் ரவயே நமஹ.**
**ஓம் ஹ்ரும் சூர்யாய நமஹ.**

இவ்வாறான மந்திரங்களை சொல்லலாம்.

## செய்யும் முறை:

### படிநிலை 1:

கைகளை கும்பிட்டபடி கால் பாதங்கள் இரண்டையும் சேர்த்து வைத்த வண்ணம் நேராக நிமிர்ந்து நிற்கவும். கண்களை மூடி சூரியன் தங்கத் தாம்பாளமாக ஜொலிப்பதாக மனதில் கற்பனை பண்ணி அதிலிருந்து எமது உடல், மனம், ஆன்மாவுக்கு அளப் பெரும் சக்தி கிடைப்பதாக நினைத்து சூரிய பகவானின் மந்திரத்தை சொல்லவும். பின்னர் சூரியனுடைய நாமத்தை சொல்லி மூச்சை உள்ளிழுத்து கொண்டே இரண்டு கைகளையும் மேலே தூக்கி பின்னால் வளையவும்.

### படிநிலை 2:

மூச்சைமெதுவாக வெளிவிட்டுக் கொண்டே முன்பக்கம் குனியவும். முழங்கால்கள் இரண்டும் மடிக்கப்படாமல் நிமிர்ந்து இருக்க பார்த்துக் கொள்ளவும். உள்ளங்கைகள் இரண்டும் தரையைத் தொட முயற்சிக்கவும். நெற்றியால் கால் முட்டியை தொடவும். ஆரம்பத்தில் தொட முடியா திருந்தாலும் நாளடைவில் தொடக்கூடிய நிலையை அடையலாம்.




### படிநிலை 3:

இரண்டு உள்ளங்கைகளையும் தரையில் நன்றாக பதிய வைத்து மூச்சை உள்ளெடுத்துக் கொண்டே வலது காலை பின்னேநீட்டி தலையை மேலே உயர்த்தி பார்க்கவும். இடது முழங்கால் சற்று முன்பக்கம் மடிந்திருக்க வேண்டும்.

### படிநிலை 4:

சுவாசத்தை வெளிவிட்டுகொண்டே இடது காலை பின்பக்கம் கொண்டு போய் நீட்டவும். இப்பொழுது இரண்டு கால்களும் நீட்டியபடி சமனாக இருக்க வேண்டும். கால்களின் விரல்கள் பூமியில் பட்டபடி இருக்கும்.

### படிநிலை 5:

உள்ளங்கைகளும், கால் விரல்களும் அப்படியே தரையில் தொட்டுக் கொண்டிருக்க கால் மூட்டின் பகுதியை மடித்து நெற்றி பூமியில் படக்கூடியதாக தலையை தரையில் பதிக்கவும். உடலை தளர்த்திக் கொள்ளவும்.

### படிநிலை 6:

கைகளையும், கால்களையும் நகர்த்தாமல் மார்பை முன்னே கொண்டு சென்று சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வது போல் செய்யவும். முழங்கால்கள், நெற்றி, மார்பு, உள்ளங்கைள், கால் விரல்கள் தரையில் பட்டபடி இருக்க வேண்டும். இடுப்பு மேலே தூக்கப்பட்ட நிலையில் வயிறு பூமியில் படாதிருக்கும். இந்நிலையில் மூச்சை வெளியே நிறுத்தி இருக்க வேண்டும். இவ்வாறு மூச்சு நிறுத்திய நிலையை "பாஹய கும்பகம்" என அழைப்பர்.

### படிநிலை 7:

மூச்சை உள்ளிழுத்து உள்ளங்கைகள் தரையில் இருந்த படியே முழங்கைகளை நிமிர்த்தி தலை, கழுத்து, மார்பை உயர்த்தவும். இடுப்பிலிருந்து கால்கள் வரை தரையில் பட்டபடி உடல் இருக்க வேண்டும். முதுகு முள்ளெலும்பு உட்பக்கமாக நன்கு வளைந்து இருக்க வேண்டும். புஜங்காச னம் போல் இருக்கும்.

### படிநிலை 8:

மூச்சை வெளியே விட்டபடி தலையை கீழே பதித்து பிருஷ்ட பாகத்தை மேலே உயர்த்தவும். இரண்டு உள்ளங்கைகளும், குதிகால்களும் தரையில் பதிந்திருக்க வேண்டும். உடல் மலை போன்ற தோற்றத்தில் காணப்படும்.

### படிநிலை 9:

ஐந்தாம் படி நிலையில் செய்தது போன்று உடலை தளர்த்தி மூச்சை உள்ளிழுத்து வெளிவிடவும்.

### படிநிலை 10:

மூச்சை உள்ளிழுத்துக்கொண்டே வலது கால் பாதத்தை இரண்டு உள்ளங்கைளுக்கும் இடையே கொண்டு வரவும். தலையை மூன்றாம் படி நிலையில் கூறியபடி உயர்த்தி மேலே பார்க்கவும். இது மூன்றாம் படிநிலை போன்று காணப்படும்.

### படிநிலை 11:

மூச்சை வெளியே விட்டபடி இடது கால் பாதத்தை முன்கொண்டுவந்து இரு உள்ளங்கைகளுக்கும் இடையே வலது பாதத்துக்கு நேராக வைக்கவும். இரண்டாம் படிநிலையில் கூறியபடி உள்ளங்கைகள் தரையில் தொட் டுக்கொண்டிருக்க நெற்றி முழங்கால்களை தொட்டபடி இருக்கும். "பாதஹஸ்தாசனம்" செய்வது போன்று இன் நிலை காணப்படும்.

### படிநிலை 12:

மூச்சை உள்ளிழுத்துக்கொண்டு கைகளை தூக்கிய வண்ணம் மேலே வந்து பின்னால் வளைந்து பழைய நிலைக்கு வரவும். கைகளை கூப்பியபடி கொண்டு வந்து நிற்கவும். இரண்டு கைகளையும் கீழே விட்டு உடலை ஒட்டிய வண்ணம் தளர்த்தியாக வைத்துக் கொள்ளவும்.

பத்து தடவைகளில் சூரிய நமஸ்காரம் செய்ய விரும்புபவர்கள் ஐந்தாம் படிநிலையையும், ஒன்பதாம் படிநிலையையும் செய்ய வேண்டிய அவசியமில்லை.

## பலன்கள்:

* சூரியனுடைய பெயர்களைச் சொல்லிச் செய்யும் போது அளப்பெரும் சக்தியை பெற்றுக் கொள்ள லாம்.
* நட்பு, பக்தி, சக்தி, ஆரோக்கியம், வலிமை உண்டா கும். நரம்பு மண்டலங்கள் புத்துணர்ச்சியடையும்.
* கழுத்துக்கு பயிற்சி அளிப்பதால் தைரொயிட்டு, பரா தைரொயிட்டு சுரப்பிகள் நன்கு தொழிற்படும்.
* பெண்களொடு சம்பந்தப்பட்ட மாதவிடாய், வெள்ளை படுதல் போன்ற பல நோய்கள் நீங்கும்.
* நோயெதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.
* கண்களுக்கு கூர்மையான பார்வையைக் கொடுத்து கண்களில் உள்ள குறைகளை நீக்கும்.
* கவலைகள், கோபம், மன அழுத்தம் நீக்கப்பட்டு மனம் அமைதியடையும்.
* உடலில் உள்ள முக்கிய சக்கரங்களான மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞா ஆகிய சக்கரங்கள் இயக்கப்படுவதோடு அதிசக்திவாய்ந்த சகஸ்ரார சக்கரமும் தொழிற்பட்டு உடலுக்கு மேலும் ஆரோக்கியத்தை அளிக்கும்.
* நரம்புத்தளர்ச்சி, மலச்சிக்கல், உடல் பருமன், தலைவலி போன்ற பிரச்சினைகளுக்கு நிவாரணம் அளிக்கும்.

சூரிய நமஸ்காரத்தில் அர்த்தசக்கராசனம், பாதஹஸ்தாச னம், அஷ்டஉட்டனாசனம், அஸ்வசஞ்சலானாசனம், துவிபாத அஸ்வசஞ்சலானாசனம், அதமுக்தசாவாசனம், சசாங்காசனம் போன்ற பல ஆசனங்கள் அடங்கியுள்ளன. எனவே, சூரிய நமஸ்காரம் செய்கின்ற பொழுது பல யோக ஆசனங்களை செய்த பலன்கள் கிடைக்கும். எனவே கூடிய ஆரோக்கியத்தையும், உற்சாகத்தையும் தரக்கூடிய சக்தி வாய்ந்த சூரிய நமஸ்காரத்தை நாம் தினமும் செய்வதால் பல நோய்களிலிருந்து விடுபடலாம்.

சூரிய நமஸ்காரத்தை மட்டும் செய்தாலே நாம் ஆயுள் முழுவதும் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கலாம். சூரிய நமஸ்காரம் செய்கின்ற பொழுது அன்றைய நாள் முழுவதும் உடலுக்கும், உள்ளத்திற்கும் உற்சாகமான நாளாக காணப்படும். எனவே சூரிய நமஸ்காரம் செய்து அதனுடைய முழு பலனையும் பெற்று ஆரோக்கியமாக வாழ்வோம்.

# மட்டு. மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகாரம்;
# பண்ணையாளருக்கு உயிரச்சுறுத்தல்;
## ம. உ. ஆணைக்குழுவில் முறைப்பாடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மாதவனை, மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகாரத்தால், பண்ணையாளர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதாக மட்டக்களப்பில் உள்ள மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக மயிலத்தமடு மாதவனை பகுதியில் நடமாடும் கால்நடைகள் மீது துப்பாக்கிச் சூடும் வெட்டுக்காயங்களும் ஏற்பட்டு, இறந்துள்ள நிலையில், பண்ணையாளர்கள், தங்களுக்கும் ஏதும் உயிர் ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சத்தில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்துள்ளனர்.

கடந்த காலங்களாக மாதவனை மயிலத்தமடு மேச்சல் தரை பகுதியில், பெரும்பான்மையினத்தவர்களின் அத்து மீறிய குடியேற்றம் பேசு பொருளாக இருந்த நிலையில் தற்போது அது மீண்டும் தலை தூக்கி உள்ளது.

மாதவனை மயிலத்தமடு பகுதியில் பெரும்பான்மை யினர் அத்துமீறி குடியேற முடியாத நிலையில் நீதி மன்றத் தடை உத்தரவு இருக்கின்ற நிலையிலும் குறித்த பகுதியில் பெரும்பான்மை இனத்தவர்கள் சோழன் கச்சான் பயிர்செய்கை மேற்கொண்டு வருவதுடன் நீதிமன்ற சட்டத்தை மதிக்காமல் செயல்பட்டு வருகின்றார்கள் என அப்பிரதேசத்தில் வசிக்கும் தமிழ் மக்கள் தெரிவித்துள்ளனர்.

பயிர்செய்கையில் ஈடுபடுபவர்கள் மேய்ச்சல் தரைக்காக ஒதுக்கப்பட்ட காணிகளுக்குள் அத்து மீறி பயிர்செய்வதனால் அப்பகுதிக்குள் நுழையும் கால்நடை கள் துப்பாக்கி சூட்டிற்கும் வெட்டுக்காயங்களுக்கும் உள்ளாகி உயிரிழந்துள்ளன.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் தலைமையில் குறித்த குடியேற்றமானது திட்டமிட்டு திணிக்கப்பட்டிருந்த போதிலும் பண்ணையாளர்களின் முயற்சியாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்கு பெற்றலுடனும் வழக்கு தொடரப்பட்டு சிங்கள குடியேற்றத்திற்கான தடை உத்தரவு எடுக்கப்பட்டிருந்தது.


படங்கள் - வ.சக்திவேல்



ஆனால் இன்று மீண்டும் பெரும்பான்மை இனத்தவர்களின் அத்து மீறிய செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. மட்டக்களப்பு மாவட்ட தற்போதைய அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா கடந்த காலங்களில் மாதவனை மயிலத்தமடு பகுதிக்கு சென்று அவர்களுடைய பிரச்சினைகளை கேட்டு அறிந்து, பண்ணையாளர்களுக்கு சார்பாக செயற்படுகின்றார் என்ற காரணத்தினால் அரசாங்க அதிபர் பதவியில் இருந்து இடமாற்றப்பட்டார்.

இந்நிலையில், அவர் தற்போது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக வந்திருக்கின்ற போதும், பெரும்பான்மையினத்தவர்களின் அத்துமீறிய செயற்பாடு கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தலைமையிலான குழுவினர் சென்று இந்த பிரச்சனைக்கு உடனடியாக தீர்வை பெற்று தருவதாக கூறி இருந்தும் அவர்களாலும் பண்ணையாளர் கள் ஏமாற்றப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

நீதிமன்ற சட்டத்தை மீறி நீதிமன்றத்தை அவமதிக்கும் விதத்தில் பேரினவாத இனத்தவர்கள் மேய்ச்சல் தரைக்காக ஒதுக்கப்பட்ட காணிகளை அத்துமீறி பிடித்து அதனுள் பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு கால்நடை களின் வாழ்வாதாரத்தை இல்லாது ஒழிக்கும் ஒரு செயற்பாட்டாக உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயத்தையும் மீன்பிடியையும் கால்நடையையும் நம்பி இருக்கின்ற ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கும் ஒரு செயற்பாடாகவே பார்க்கப்படுகின்றது எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமாயின் ஒரு இன வன்முறையை தூண்டும் அளவிற்கு இந்த விவகாரம் செல்லும் என்பதில் எவ்வித அச்சமுமில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

ஆகவே, இந்த மேய்ச்சல் தரை விவகாரம் தொடர்பாகவும், மகாவலி பிரச்சினைக்கும் மாவட்டத் திலுள்ள அரசியல்வாதிகள், மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் ஒரு முற்றுப்புள்ளி வைக்காவிட்டால் இதன் விளைவுகள் பாரதூரமாக இருக்கும் என்றே கூற முடியும் எனவும் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

பண்ணையாளர்கள் மிகவும் அச்சத்தில் உள்ளதுடன் அவர்களுடைய உயிர்களுக்கும் உத்தரவாதம் இல்லாத நிலை தான் காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

# தேர்தல் நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் முட்டுக்கட்டை
## முன்னாள் பிரதி அமைச்சர் கணேசமூர்த்தி



வ. சக்திவேல்

அரசாங்கம் வங்குரோத்து நிலைக்கு எவ்வாறு வந்தது என்று மக்களுக்கு தெரியும். அப்படி இருந்தும் கூட ஜனநாயகத்தை பாது காப்பது மக்களுடைய தேர்தல் உரிமைகளை பாதுகாப்பது ஒரு அரசினுடைய கடமை. அந்தக் கடமையை செய்யாமல் இந்த அரசாங்கம் அடித்துக் கொண்டு இன்று ஒரு ஜனநாயக விரோத போக்கை மேற்கொண்டு இருக்கின்றது. குறிப்பாக இந்த நாட்டினுடைய ஜனாதிபதி இந்த தேர்தல் நடத்துவதற்கு மிகவும் முட்டுக்கட்டையாக இருக்கிறார் என முன்னாள் பிரதிய அமைச்சரும், ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவருமான சோமசுந்தரம் கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் அமைந்துள்ள கிழக்கு ஊடக மன்றத்தில் செவ்வாய்கிழமை (28.02. 2023) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில், இலங்கை திருநாட்டின் ஜனநாயக வரலாற்றிலே மக்கள் ஒரு பெரிய ஜனநாயகத்திற்கான அச்சு றுத்தலை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது. மக்களினுடைய இறையாண்மையை உறுதிப்படுத்துவது ஒரு நாட்டினுடைய ஜனநாயகமாகுமாகும்.

குறிப்பாக உள்ளூராட்சிமன்ற தேர்தல் ஒரு வருடத்துக்கு முன்பே நடைபெற்றிருக்க வேண்டும். இந்நிலையில் தற்போது தேர்தல் ஆணையத்தினால் தேர்தல் அறிவிக்கப்பட்டு தேர்தல் நடவடிக்கைகளை உரிய சட்ட ரீதியான முறையில் சுயாதீன தேர்தல் ஆணைகுழு மேற்கொண்டுள்ளது. அதன் அடிப்படையி லேயே அரசாங்கத்தினுடைய ஒப்புதலுடன் சட்டமா அதிபருடைய ஆலோசனை உடன் நீ தியான முறையில் அமைந்த எல்லாவிதமான ஒப்புதல்களையும் பெற்றுதான் தேர்தல் ஆணை யகம் இந்த தேர்தலை பிரகடனப்படுத்தியது.

தற்போது இந்த நாட்டினுடைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தேர்தல் ஒன்று இல்லை என சொலுகின்றார். இல்லாத ஒரு தேர்தலுக்கு எப்படி பணம் வழங்குவது எனவும் தெரிவிக்கின்றார். இது ஜனநாயகத்தை ஒரு கேலி செய்கின்ற செயலாகவே இலங்கையிலே ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ள எல்லா மக்களும் பார்க்கிறார்கள்.

அரசாங்கம் வங்குரோத்து நிலைக்கு எவ்வாறு வந்தது என்று மக்களுக்கு தெரியும். அப்படி இருந்தும் கூட ஜனநாயகத்தை பாது காப்பது மக்களுடைய தேர்தல் உரிமைகளை பாதுகாப்பது ஒரு அரசினுடைய கடமை. அந்தக் கடமையை செய்யாமல் இந்த அரசாங்கம் அடித்துக் கொண்டு இன்று ஒரு ஜனநாயக விரோத போக்கை மேற்கொண்டு இருக்கின்றது. குறிப்பாக இந்த நாட்டினுடைய ஜனாதிபதி இந்த தேர்தல் நடத்துவதற்கு மிகவும் முட்டுக்கட்டையாக இருக்கிறார்.

ஜனாதிபதி நிதி அமைச்சை வைத்துக் கொண்டுள்ளார். 21வது அரசியலமைப்பு மாற்றப்பட்ட பின்னர் உண்மையிலேயே அவர் நிதியமைச்சராக இருக்க முடியாது, ஜனாதிபதி அவர்கள் பாதுகாப்பு அமைச்சை மாத்திரம்தான் வைத்துக் கொள்ளலாம் அப்படி இருந்தும்கூட ஜனாதிபதி அவர்கள் நிதி அமைச்சை வைத்துக் கொண்டு அந்த அமைச்சினூடாக இந்த தேர்தலை நடத்தாமல் செய்வதற்கு எல்லா விதமான முயற்சிகளையும் மேற்கொண்டு இருக்கின்றார்.

ஆரம்பத்திலேயே இந்த தேர்தல் நடத்து வதற்கு கட்டுப்பணம் செலுத்துவதற்கு சில நாட்களுக்கு முன்னர் பொதுநிர்வாக அமைச்சி னுடைய செயலாளருக்கு கட்டுப்பணத்தை தெரிவு அத்தாட்சி உத்தியோகத்தர்கள் பெறக் கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அது உண்மையிலேயே ஜனநாயக முறை யிலே சுயாதீன ஆணைக்குழுவான தேர்தல் ஆணைக்குழுவினுடைய சுதந்திர தன்மை யிலே மிகவும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு உத்தரவாக அமைந்திருந்தது. மீண்டும் ஜனநாயக அமைப்புகளின் அழுத்தத்தின் காரணமாக அந்த உத்தரவு மீளப்பெறப்பட்டது.

ஆனால்இந்ததேர்தல்நிச்சயமாகநடத்தப்பட வேண்டும் தபால் வாக்களிப்புக்கான திகதி பிற்போடப்பட்டுள்ளது. தேர்தல் இதுவரையில் ஒத்திவைக்கப்பட்டவில்லை. ஆனால் வாக்களிப்புக்கான திகதிதான் மாற்றப்பட்டு இருக்கின்றன. எனினும் அண்மையிலே வெளியிடப்பட்ட தேர்தல் ஆணைக்குழுவின் முடிவின்படி தேர்தல் பிற்போடப்பட்டு அதற்குரியபுதியதிகதி03திகதிஅறிவிக்கப்படும் என்று கூறியிருக்கின்றனர்.

இந்த நாட்டினுடைய ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கும், இந்த மக்களுடைய நிலைமையை பாதுகாப்பதற்கும், சுயாதீன ஆணைகுழுவான தேர்தல் ஆணைக்குழு மிகவும் இதய சுத்தியுடன் தொழிற்பட வேண்டிய ஒரு கடப்பாடு இருக்கின்றது. அந்த தேர்தல் நடத்துகின்ற குழாமும் அதனுடைய தலைவரும் இந்த விடயத்தில் மக்களோடு நின்று மக்களுடைய ஜனநாயக உரிமை பாதுகாப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

# பெண்கள்: சமூக மாற்றத்தின் தொடக்க புள்ளி

**சுமையா சத்தார்
நெல்லியகம**

எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பு பெண் என்பவள் சமயலறைக்கும், கட்டில் அறைக்கும் இடையே பவனி வருபவளாக சமூகத்தினை எட்டிப் பார்க்க முடியாத அடக்குமுறைக்குள் ஒடுக்கப்பட்டவளாக தனக்கென சுய சுதந்திரம் கூட இன்றி பிறருக்காய் வாழும் ஒரு பொருட்டாகவே மதிக்கப்பட்டாள்.




பின்னரைப் பகுதிகளில் பாரதி முதலாம் பெரும் கவிஞர்களின் எழுத்துக்களின் மூலமாக ஆண்களுக்கு சரி நிகர் பெண்கள் என்ற சுதந்திர வேட்கை மொழியப் பட்டது. இதனை பாரதியும் பெண் விடுதலை முதலாம் பல கவிதைகளில் பெண்களுக்காக குரல் கொடுத் திருக்கிறார். உதாரணமாக பெண் விடுதலை என்ற கவிதையில் அவற்றை காணலாம்.

அன்று பாரதி காண விழைந்த வீறுகொண்ட பெண் சமுதாயத்தை இன்று நாம் கண்டு கொண்டிருக்கிறோம். இன்று சேவை துறைகளாக இருக்கட்டும், கல்வித்துறையாக இருக்கட்டும் என அனைத்து துறைகளிலும் பெண்கள் முன்னிலை வகிப்பதனை எம் கண்களால் காணக் கூடியதாக உள்ளது. இவை மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கும் அதே சமயத்தில் பெண்கள் இன்னும் பாலியல் கொடுமை, துஷ்பிரயோகம் போன்றவற்றுக்கு உட்படுத்தப்படுவது மனக்கவலையை ஏற்படுத்தக் கூடிய விதமாகவே இருக்கிறது.

இன்று சமுதாயத்தில் சிறுபிள்ளை, வளர்ந்தோர் என்ற பாகுபாடு கூட இன்றி பெண்கள் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு துஷ்பிரயோகம் எனும் பெயரில் சித்திரவதை செய்யப்பட்டு அவர்களின் வாழ்க்கை பக்கம் கிழித்தெரியப்படுகிறது. எத்தனையோ ஆசிபாக்கள் இத்தகைய கொடுமையை அனுபவித்தவர்களாய் மடிந்து போகின்றனர். மனசாட்சி மறந்த மனிதத்தை சீர் செய்ய மனிதம் மீண்டும் தழைக்க பெண் என்பவள் தாயாக மட்டுமல்ல கடவுளாகவும் போற்றப்பட வேண்டும்.

பெண்களின் இன்றைய நிலை சமூகத்தில் சிறந்த நிலையை அடைந்த போதிலும் சில தவறெண்ணம் கொண்ட காமத்தை மட்டுமே பற்றுக்கோடாகக் கொண்ட சில ஆடவர்களினால் அவர்களின் வாழ்க்கை புதைக்கப்படுகின்றது.

மாற்றம் எங்கிருந்து துவங்க வேண்டும் தெரியுமா? பெண்களை தன்னை பெற்றெடுத்த தாயையும் விட சிறந்தவளாக காண வேண்டும்.அவ்விடத்தில் தான் மாற்றம் தொடங்க வேண்டும். ஆகவே பெண்களை கண்களாய் காத்திடுங்கள்.

## சிறுவர்கள் துன்புறுத்தல்களுக்கு உள்ளானால்...

# பெற்றோர்களே நீங்களும் குற்றவாளிகளே

பதினெட்டு வயது குட்பட்ட ஒவ்வொருவரும் சிறுவர்களாவர். சமவாயத்தில் குறிப்பிட்டப்பட்டிருக்கும் எல்லா உரிமைகளையும் ஒவ்வொரு பிள்ளையும் அனுபவித்தல் வேண்டும். பிள்ளைகளை சகல வகையான இம்சைகள் மற்றும் புறக்கணிப்புகள் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை உடையவர்களாக பெற்றோரும் ஏனைய பராமரிப்பாளர்களும் பிள்ளைகளை துன்புறுத்தும் உரிமை அற்றவர்கள். எந்த ஒரு நபரும் பிள்ளைகளை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முடியாது. சிறுவர்கள் பூத்துக் குலுங்கும் மலர்களைப் போன்றவர்கள். அம்மலர்களை கசக்காமல் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும். அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டிய முதலிடம் குடும்பமாகும். அடுத்த கட்டமாக முன்பள்ளி ஆசிரியர்கள். அதனைத் தொடர்ந்து பாடசாலை ஆசிரியர்கள் என ஒவ்வொருவரும் பிள்ளைகளை பாதுகாக்க வேண்டும். அது மட்டுமல்ல ஒவ்வொருவரது உணர்வும் சிறுவர்களை பாதுகாப்பதாக அமைய வேண்டும். சிறுவர் துஷ்பிரயோகம் பல வகைகளில் இடம் பெறுகின்றன. உடல் ரீதியான இம்சைகள், பாலியல் செயல்கள், பிள்ளைகளை கைவிடுதல், உளரீதியான இம்சைகள், பாரபட்சம் காட்டுதல் போன்றனவாகும். இந்த வகையில் சிறுவர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியான பாதிப்பு ஏற்படுமாறு செயற்படுவது, சிறுவர்களுக்கு கிடைக்க வேண்டிய உணவு, பாதுகாப்பு அன்பு, ஆதரவு வழங்காதிருத்தல், அல்லது தடுத்தல் சிறுவர் துஷ்பிரயோகமாகும்.

சிறுவர்கள் மிகவும் விசேடமானவர்கள் அனைத்து மதங்களும் சிறுவர்களை மேம்படுத்துகின்றன. சிறுவர்கள் பலத்துடனும் நலத்துடனும் வாழ உணவு உட்கொள்ள வேண்டும். உடற்பயிற்சி செய்ய வேண்டும். நன்றாக கல்வி தற்க வேண்டும். உற்சாகமாக வாழ வேண்டும். தகுந்த தரம் வாய்ந்த வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும். நல்ல நண்பர்களுடன் பழக வேண்டும். விளையாட்டுகளில் ஈடுபட வேண்டும். ஒவ்வொரு பெற்றோரும் தங்களது பிள்ளைகளுக்கு சில விடயங்களை கற்றுக் கொடுக்க வேண்டும். பாதுகாப்பற்ற அல்லது தனிமையான இடங்களில் இருப்பதனை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பாதுகாப்பற்ற சூழலில் இருப்பதாக உணர்ந்தால் உடனடியாக அவ்விடத்தை விட்டு நகருமாறு கூறுதல் வேண்டும். தவறான செயலுக்கு வற்புறுத்தினால் அதற்கு விருப்பமின்மையை தெரிவிக்க வேண்டும். தவறான செயல் தொடர்பாக நம்பிக்கை உரியவரிடம் கூறுமாறு கூற வேண்டும். பரிசு பொருட்களை தந்து உங்களிடம் ஏதாவது கேட்டால் அல்லது உங்களுக்கு தவறு என்று தெரிந்த ஏதாவது செய்யும்படி கேட்டால் அதற்கு விருப்பமின்மையை அந்த நபரின் கண்களை நீராக நோக்கி தெரிவிக்குமாறு கூற வேண்டும். பிள்ளைகளை வீதியால் செல்லும்போது எவராவது பின்தொடர்ந்தால் வேறு பக்கமாக செல்ல வேண்டும் அல்லது மக்கள் நடமாட்டம் உள்ள இடத்துக்குச் சென்று உதவி கேட்குமாறு கூற வேண்டும். ஒரு நபர் தனது வாகனத்தில் ஏற்றி செல்வதாக கூறினால் முடியாது என்று கூற வேண்டும் அல்லது ஓடி விட வேண்டும் அல்லது வளர்ந்தவர்களிடம் கூற வேண்டும். உமக்கு தவறு என்று தெரிந்த ஒரு காரியத்தை செய்யும்படி கூறும்போது முடியாது என்று கூறவேண்டும்.

சிறுவர்கள் எந்த நபரைப் பற்றியும் தவறான கருத்தை முன்வைக்கும் போது பெற்றோர்கள் அது தொடர்பாக கண்காணிக்க வேண்டும். பிள்ளை அவ்வாறான கருத்தை முன்வைப்பதற்குரிய காரணத்தை அறிய முற்பட வேண்டும். பெற்றோர்களது கவலையீனமும் பிள்ளைகளை அழிவு பாதை இட்டுச் செல்லாமல் அபிவிருத்தி பாதையில் நடைபெற வழி அமைத்துக் கொடுக்க வேண்டும். சிறுவர்களை துஷ்பயோகங்களில் இருந்து பாதுகாக்க வேண்டும்.

உதாரணமாக, விதியால் சென்ற ஒரு சிறுமியிடம் வீதியால் வந்த ஒரு காரியிலிருந்த நபர் ஒரு விலாசத்தினை காட்டி கேட்டபோது அந்த சிறுமி அதற்குரிய பாதையினை அவரிடம் கூறிய போது அவர்கள் அந்த விலாசத்தை நோக்கி நகர்ந்தார்கள். அதன் பிறகு அந்த சிறுமி தன் வீட்டுக்கு சென்றது. அந்த வாகனத்தில் சென்றவர்கள் அவர்களது வீட்டில் இருந்தார்கள். நாங்கள் உங்க வீடு தான் உங்கள் வீட்டை தானே கேட்டோம் தெரிந்த நீங்கள் ஏன் எங்களுடன் வரவில்லை. இலகுவாக வந்திருக்கலாமே என்று கேட்டார். அறிமுகம் இல்லாத நபர்களுடன் வருவது தவறு என்று என்னை எனது பெற்றோர்கள், ஆசிரியர்கள் விழிப்பூட்டியுள்ளார்கள். உங்களை எனக்கு இதற்கு முன் தெரியாத காரணத்தினால் நான் உங்களுடன் வருவதற்கு தவிர்த்தேன் என்று அந்த சிறுமி பதிலளித்தார். இது ஒரு விழிப்புணர்வுடைய ஒரு சிறுமியினுடைய செயலாகும்.

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் தனது தந்தையுடன் வருகின்ற மாமா நல்லவர் அல்ல என்று தன் தாயிடம் பல சமயம் கூறியது பிள்ளை. தாய் அதனை கவனியாது விட்டதனால்

மது போதையில் இருந்த அந்த நபர் பலமுறை சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியுள்ளார். சிறுமி மது பாவிப்பதனை கண்டதனால் தான் அந்த நபரை கெட்டவராக பார்க்கின்றது என்று அந்த தாய் தீர்ப்பிடல் ஒன்றை செய்ததனால் அந்த சிறுமியின் கதை அங்கு கருத்தில் கொள்ளப்படவில்லை. அதனால் அங்கு பல்வேறு வன்முறைகள் பெற்றிருந்ததன. எனவே சிறுவர்களுடைய வார்த்தைகளை காது கொடுத்து கேட்க வேண்டும். தங்களுடைய வேலைப்பளு, பொருளாதார ஓட்டம் காரணங்களாக பிள்ளைகளை கவனிப்பாரற்று விடுவது இந்த பிள்ளைகளுக்கு பல்வேறு துஷ்பிரயோ கங்கள் இடம்பெறுவதற்கு காரணமாக இருக்கின்றன.

இன்னும் ஒரு மாணவன் தான் தொலைக்காட்சியாக இருந்தால் என சுய சரிதை எழுதியிருந்தார். இங்கு பார்க்கும்போது அந்த மாணவனுடைய தாய் தொலைக் காட்சிக்கு கொடுக்கின்ற அந்த முக்கியத்துவத்தினை தனது பிள்ளைகளுக்கு வழங்க மறுப்பதனால் தான் தான் ஒரு தொலைக்காட்சியாக இருந்தால் தன்னுடைய தாயினுடைய பார்வையில் பட்டுக் கொண்டிருப்பேன் என்று நினைக்கின்ற அளவுக்கு அந்த பிள்ளையினுடைய மன வேதனை அதிகரித்துக் கொண்டு போகின்றது.

இன்னும் ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு பிள்ளையை இன்னொரு பிள்ளையோட ஒப்பிட்டு பேசுகின்ற தாயைப் பார்த்து அந்தப் பிள்ளை கோபமடைகின்றது. வீட்டில் உள்ள பொருட்களை உடைக்கின்றன. பிள்ளை வீட்டில் உள்ள பொருட்களை உடைப்பதனால் மனநிலை பாதிக்கப்பட்டதாக நினைத்து தாய் அந்த பிள்ளையை உளநல மருத்துவரிடம் அழைத்து சென்றார். அப்போது அந்த உளமலர் உலநல மருத்துவரிடம் பிள்ளை கூறியது யாதெனில் என்னிடம் தாய் கேட்கின்ற ஒரு கேள்விக்கு என்னிடம் ஒரு பதில் உண்டு அதை கூறுவதற்கு எனது மனது இடம் கொடுக்கவில்லை அதனாஉடைக்கின்றேன். பொருட்களை தூக்கி உடைக்கின்றேன் அதன் உச்ச கட்டம் தான் தொலைக்காட்சியை தூக்கி உடைக்க போனேன். அது தொடர்பாக கலந்துரையாடிய போது அந்த பிள்ளை என்னை பக்கத்து வீட்டு பிள்ளையோட ஒப்பிட்டு பேசுகின்றார். அப்படியானால் அந்தப் பிள்ளை என் மனதில் எழுகின்ற கேள்வி என்னை அந்த நபருக்கு நீங்கள் பெற்றிருக்கலாமே என்ற கேள்வி கேட்க மனசு துடித்தது.

எனவே, மழை வந்தபின் நனைவதை விட மழை வரும் முன் குடை பிடிக்க வேண்டும். சிறுவர்கள் நாட்டின் முதுகெலும்பு. எனவே சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் வழங்கி மலரும் சிறுவர்களின் எதிர்கால உலகை வழிநடத்த கீறல் கிளிசரற்ற உடல் உளரீதியில் ஆரோக்கியமான மனித வளங்களை உருவாக்கும் முயற்சியில் சர்வதேசமும் இலங்கையும் மும்முரமாக ஈடுபட்டு வரும் இச்சந்தர்ப்பத்தில் நாளைய தலைவர்களை கல்மனம் கொண்ட காமுகர்கள் மத்தியில் இருந்து பாதுகாக்க வேண்டும். சிறுவர் உலகம் சிறுவர்களுக்கு உரியது. அத்தகைய சிறுவர்களை பாதுகாக்க பெற்றோர் மத்தியில் விழிப்புணர்வுகளை அதிகரிக்க வேண்டும்.

# இயற்கையின் அழகுச் சூழலில் மனிதம்








வ. சக்திவேல்
shagthivel@gmail.com

மனிதனுடைய வாழ்க்கை அவன் வாழ்கின்ற சூழலை பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது. நல்ல சூழல் ஒரு மனிதனை "மனிதம்" நிறைந்த மனிதனாக்குகிறது. அதே சமயம், மாசடைந்த சூழல், மனிதனை நோயாளியாகவும் மன அழுத்தம் மிக்கவனாகவும் மாற்றுகிறது. மனிதன் தான் வாழும் சூழலை பாதுகாத்து வாழும் போது, அச்சூழல் அழகாவதோடு அவனுடைய வாழ்க்கையும் அழகாக இருக்கும். இயற்கையின் படைப்பு அவ்வளவு அழகானது. இவற்றை காப்பது எம் தலையாய கடமையாகும்.

**"பத்துப் பன்னிரண்டு தென்னைமரம்**
**பக்கத்திலே வேணும் - நல்ல**
**முத்துச் சுடர்போலே நிலாவொளி**
**முன்பு வரவேணும் - அங்கு**
**கத்தும் குயிலோசை சற்றேவந்து**
**காதில் படவேணும் - என்றன்**
**சித்தம் மகிழ்ந்திடவே நன்றாயிளம்**
**தென்றல் வரவேணும்"**

முன்னர் கிராமங்களில் பாரதி கேட்கும் அனைத்தையும் பெறுவது சாத்தியமாவது போன்று காணப்பட்டிருந்தன. மாறாக தற்காலத்தில் கிராமங்கள் நகரமயமாக்கலை நோக்கி நகரத் தொடங்கியுள்ளன. தூய்மையான கிராமத்து வயல்வெளிக் காற்றிலும் மாசு படியத் தொடங்கிவிட்ட காலமாகிக் கொண்டிருக்கின்றன. சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் நோக்கிலேயே நாம் நமது ஆன்மிகத் திருத் தலங்களில் தல விருட்சங்களைப் போற்றிக் கொண்டாடு கின்றோம், புண்ணியத் தீர்த்தங்கள் என்றும், புண்ணிய நதிகள், குளங்கள், என்றும் சொல்லி நீர் நிலைகளின் பெருமையை நிலைநாட்டுகின்றோம். ஆனாலும், இக்காலத்தில் இவ்வாறான இயற்கை சூழலில் தன்னகத்தே கொண்டமைந்த அனைத்தும் மாசுபடுத்தப்பட்டு வரப் படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

## "பசுமையான உலகை உருவாக்க ஒன்றிணைவோம்"



"பசுமையான உலகை உருவாக்க ஒன்றிணைவோம்" எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு வாவிக் கரையோரத்தை சுத்தப்படுத்தும் நிகழ்வு அண்மையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட சிரமதானப் பணியானது புளியடி க்குடா, பெரிய உப் போடை, சின்ன உப்போடை மற்றும் முனிச்வீதியை அண்டிய வாவிக்கரையோரங்களில் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட கரிட்டாஸ் எகெட் நிறுவனத் தின் பணிப்பாளர் அருட்பணி ஏ.யேசுதாசன் அடிகளாரது ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட குறித்த தூய்மைப்படுத்தும் செயற்பாடானது, கரிட்டாஸ் எகெட் நிறுவனத்தின் சுற்றாடல் பாதுகாப்பு செயற்திட்டத்தின் கீழ் முன்னெடு க்கப்பட்டது.

## "பூலோகம் ஒரே ஒரு குடிமனை"

இது இவ்வாறு இருக்க "பூலோகம் ஒரே ஒரு குடிமனை" எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சுற்றாடல் நிகழ்வுகள் பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரெத்தினம் அவர்களின் தலைமை மற்றும் வழிகாட்டுதலில் இடம்பெற்றன.



இதன்போது மக்களிடையே– உணவுப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுகளை மேற்கொள்வதற்காக பிரதேச செயலக பிரிவின் கீளுள்ள 45 கிராம சேவகர் பிரிவுகளிலும் 225 விழிப்புணர்வு வீட்டுத் தோட்டங்கள் கிராம அலுவலர் அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் மக்களின் பங்களிப்புடன் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

எதிர்கால சந்ததியினரை ஊக்குவிக்கும் முகமாக மகிழூர் பாலர் பாடசாலை மாணவர்களால் வீட்டுத் தோட்டம் அமைக்கும் செயற்பாடுகளும், இதன்போது ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து பிரதேச செயலக பசுமைக் கழக உறுப்பினர்களால் வருடாந்தம் வெளியிடப்படும் சுற்றாடல் செய்திமடல்- 2022 வெளியீட்டு நிகழ்வு மற்றும் உணவுப் பாதுகாப்பு, சிக்கனம் தொடர்பில் "உற்பத்தி செய்வோம் உலகை வெல்வோம்" எனும் துண்டுபிரசுர விநியோகமும் இடம்பெற்றதோடு பிரதேச செயலக வளாகத்தில் உத் தியோகத்தர்களினால் பயிர்ச்செய்கை மேம்பாட்டுத் திட்டமும், இதன்போது ஆரம்பித்துவைக்கப்பட்டன.

## ஆனந்தகிரி அறப்பணி சபையால் விசேட மரநடுகை நிகழ்வு

மட்டக்களப்பு மாவட்ட வன பரிபாலன திணைக்களத் தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு ஆனந்தகிரி அறப்பணி சபையின் ஏற்பாட்டில் "ஆளுக்கொரு மரம் நடுவோம் இயற்கையை நேசிப்போம்" எனும் நிகழ்ச்சித்







திட்டத்திற்கமைவாக மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் கிராமத்தில் அமைந்துள்ள கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் புற்தரை கிரிக்கட் மைதான வளாகத்திலும், மட்டக்களப்பு கருவேப்பங்கேணி கோல்டன் ஈகிள் விளையாட்டு மைதான வளாகத்திலும் இடம்பெற்றன. இதன்போது திருக்கொன்றைமரம், புளியமரம், புங்கைமரம், கத்தாமரம், வேம்புமரம், நிழல்வாகை, மயிலைமரம், இலுப்பைமரம் முதலான 250 இற்கும் மேற்ட்ட மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.

இன்றைய காலகட்டத்தில் மரங்களை அழித்தால், காடழிப்பு முதலான காரணிகளால் இயற்கையின் சமனிலை முழுமையாக பாதிக்கப்படுவதுடன் மழை வீழ்ச்சி குறைவடைந்து புவியில் அதிக வெப்பநிலை காணப்படுகின்றது. இவ்வாறான நிலைகளை கருத்திற் கொண்டு மட்டக்களப்பு மாவட்ட ஆனந்தகிரி அறப்பணி சபையால் "ஆளுக்கொரு மரம் நடுவோம் இயற்கையை நேசிப்போம்" எனும் செயற்றிட்டத்திற்கமைவாக மரங் களை பராமரிக்கக்கூடிய இடங்களில் நடுகை செய்து அவற்றை மேற்பார்வை செய்து வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்வாறு ஆங்காங்கே சிற்சில விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெற்று வந்தாலும், காடழிப்பு, அதிக வாகனங்களின்பாவனை, கழிவுகள் நீர் நிலைகளைச் சென்றடைதல், உள்ளிட்ட பல விடயங்களால் இன்னும் சுற்றாடல் பாதிப்புற்றுக் கொண்டு செல்லும் நிலமையே காணப்படுகின்றது.

எனவே, வருடத்தில் ஒரு நாள் சர்வதேச சுற்றாடல் தினம் என நிருணயிக்கப்பட்டு அத்தினத்தில் ஆங்காங்கே சுற்றாடல் சார்ந்த செய்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், அவை அன்றய தினத்திற்காக மாத்திரமே மேற்கொள்ளப்படும் விடையங்களாகத்தான் நோக்கப் படுகின்றது. ஏனெனில் தற்கால இயந்திரமயமான யுகத்தில் மனித சமூகத்திற்கு மாத்திரமின்றி நீர் நிலைகள் மற்றும் காடுகளிலும் வாழும் உயிரினங்களுக்கு தீங்கு ஏற்படும் வகையில் சுற்றாடல் மனிதர்களாலேயே செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் தற்கால சமூகம் மாத் திரமின்றி வளர்ந்து வருகின்ற சமூகமும் பாதிக்கப்பட்டுக் கொண்டே செல்கின்றன.

எனவே, சுற்றாடல் தினத்தை மாத்திரம் மையமாக வைத்து ஒரு சில இடங்களில் அதுவும் குறிப்பிட்ட ஒரு பகுதியினர் மாத்திரம் முன்னின்று சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்வதால் மாத்திரம் சிதைந்து போகும் சூழலை மாற்ற முடியாது. இதில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொண்டு நாளாந்தம் மரநடுகை, நீர் நிலைகள் மாசுறு வதைக் கண்காணித்தல், காடழிப்புக்களைத் தவிர்த்தல், புகைப்பிடித்தல், இயற்கை முறையில் விவசாயங் களை மேற்கொள்ளல், உள்ளிட்ட பல விடயங்கைள் கைக்கொள்ளும் பட்சத்திலேயேதான் வருகின்ற எதிர்கால சந்ததியினரையாவது சிறந்த ஆரோக்கியமான சுற்றுப்புறச் சூழலில் திகழ வைக்கலாம் என்பதுவே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

# சர்வதேசத்தை மீறி உக்ரைன் மீது ரஷ்யா போர்




## ஐ.நா. பொதுச் செயலாளர் குற்றச்சாட்டு

நியூயார்க்:

சர்வதேச சட்ட விதிகளை மீறி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்திருக்கிறது என்று ஐ.நா. சபை பொதுச்செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த ஆண்டு பிப்ரவரி 24-ம் தேதி உக்ரைன் மீது ரஷ்ய ராணுவம் தாக்குதலை தொடங்கியது. இரு நாடுகள் இடையிலான போர் ஓராண்டை எட்டியுள்ளது. இரு தரப்பிலும் இதுவரை தலா ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர். பல லட்சம் பேர் அகதிகளாக வெளிநாடுகளில் தஞ்சமடைந்து உள்ளனர்.

இந்த சூழலில் உக்ரைனில் இருந்து ரஷ்ய ராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும் என்பதை வலியுறுத்தி ஐ.நா. பொது சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. உக்ரைன் மற்றும் 60 நாடுகள் இணைந்து தாக்கல் செய்த இந்த தீர்மானத்தின் மீது நேற்று விவாதம் நடைபெற்றது. இதில் ஐ.நா. பொதுச்செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ் பேசும்போது, "ஐ.நா. விதிகள், சர்வதேச சட்ட விதிகளை மீறி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளது. இதன்காரணமாக பிராந்திய அமைதி சீர்குலைந்துள்ளது. சர்வதேச அளவில் பதற்றம் எழுந்திருக்கிறது. போர் என்பது மிகப்பெரிய பிரச்சினை. எந்தவொரு பிரச்சினைக்கும் போர் மூலம் தீர்வு காண முடியாது. உக்ரைனில் இருந்து ரஷ்ய படைகள் உடனடியாக வெளியேற வேண்டும்'' என்று வலியுறுத்தினார்.

உக்ரைன் விவகாரத்தில் இந்தியா நடுநிலை வகித்து வருகிறது. போரை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று ரஷ்யா, உக்ரைனிடம் இந்திய பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தி வருகிறார். இந்திய அரசு சார்பில் இரு நாடுகளின் தலைவர்களிடம் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

## மேற்கு நாடுகள் வாக்குறுதிகளை நிறைவேற்றினால் உக்ரைனுக்கு வெற்றி



கீவ்: தங்களுக்கு மேற்கத்திய நாடுகள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றினால் உக்ரைனின் வெற்றி தவிர்க்க முடியாதது என்று அந்நாட்டு அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்கள் சந்திப்பில் ஜெலன்ஸ்கி பேசும்போது, "மேற்கத்திய நட்பு நாடுகள்உக்ரைனுக்குநிதிசார்ந்தும்,ஆயுதங்கள் சார்ந்தும் அவை அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றினால் ரஷ்யாவின் படைகளை நாங்கள் பின்னுக்குத் தள்ளுவோம். எங்களது வெற்றி தவிர்க்க முடியாததாக ஆகும். நாம் சிறப்பாக பணியாற்றினால். வெற்றி நமக்கு நிச்சயம்'' என்று பேசினார்.

இதனிடையே, உக்ரைனில் இருந்து ரஷ்ய ராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும் என்பதை வலியுறுத்தி ஐ.நா. பொது சபையில் தீர்மானம் உக்ரைனால் கொண்டு வரப்பட்டது. 193 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா. பொதுச் சபையில் 141 நாடுகள் இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. 7 நாடுகள் எதிராக வாக்களித்தன. இந்தியா உள்பட 32 நாடுகள் வாக்களிப்பை புறக்கணித்தன.

முன்னதாக, ரஷ்ய அதிபர் புதின், உக்ரைன் - ரஷ்யா இடையேயான போரின் நிலை குறித்து கூறும்போது, "உக்ரைன் விவகாரத்தில் அமெரிக்காவும், ஐரோப்ப நாடுகளும் ஒத்துழைப்பு அளிக்க மறுத்து வருகின்றன. இந்தச் சூழலில் நாங்கள் போதும் இந்தப் போரை கைவிட மாட்டோம்'' என்று தெரிவித்தார்.

## கால்பந்தாட்ட மைதானத்தில் 'டெடிபியர்' மழை...



இஸ்தான்புல்:

துருக்கியின் பெசிக்டாஸ் நகரில் நடந்த கால்பந்தாட்ட போட்டியின்போது பூகம்ப பாதிப்பால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு டெடிபியர்களை பார்வையாளர்கள் மைதானத்தில் தூக்கி எறிந்தது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

கடந்த பிப்ரவரி 6ஆம் தேதி சிரியா - துருக்கி எல்லையில் மிகவும் சக்திவாய்ந்த பூகம்பம் ஏற்பட்டது. 7.8 ரிக்டராக பதிவான அந்த பூகம்பம் ஏற்படுத்திய தாக்கத்தால் இதுவரை துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட பலி எண்ணிக்கை 50,000-ஐ கடந்துள்ளது.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட சிரியா - துருக்கி நாடுகளுக்கு உலக நாடுகள் நிவாரண மற்றும் மீட்பு பணி உதவிகளை செய்தன. பூகம்ப பாதிப்பிலிருந்து இரு நாடுகளும் மெல்ல மீண்டு வருகின்றனர்.

இந்த நிலையில்தான் துருக்கியின் பெசிக்டாஸ் நகரில் உணர்வுபூர்வமனான சம்பவம் நடந்துள்ளது. துருக்கியில் உள்ளூர் கால்பந்து கிளப் போட்டிகள் நடந்து வருகிறது. இதில் பெசிக்டாக்ஸில் நேற்று நடந்த போட்டியில் பெசிக்டாக்ஸ் - ஆண்டலியாஸ்போர் அணிகள் மோதின.

இரு அணிகள் இடையே நடந்த போட்டி 4 மணி 17 நொடிகளுக்குப் பிறகு நிறுத்தப்பட்டது ( பிப் 6 ஆம் தேதி 4.17 மணியளவில்தான் துருக்கி - சிரிய எல்லை பூகம்பம் ஏற்பட்டது) அப்போது அங்கு கூடியிருந்த ரசிகர்கள் தாங்கள் கொண்டு வந்த டெடிபியர் பொம்மைகளை மைதானத்தில் தூக்கி எறிந்தனர். இதனால் அங்கு டெடிபியர் மழை பொழிந்தது.

## இந்தியாவின் வளர்ச்சியும் முக்கியத்துவமும் மேலும் அதிகரிக்கும்: அமெரிக்கா

வாஷிங்டன்: இந்தியாவின் வளர்ச்சியும் அதன் சர்வதேச முக்கியத்துவமும் மேலும் அதிகரிக்கும் என்று அமெரிக்க வெளியுறவு இணை அமைச்சர் நான்சி இசோ ஜாக்சன் தெரிவித்துள்ளார்.

சிலிகான் பள்ளத்தாக்கிற்கு கடந்த வாரம் வந்த தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்க வெளியுறவு இணை அமைச்சர் நான்சி இசோ ஜாக்சன், அங்குள்ள சமுதாய தலைவர்களிடமும், இந்திய ஊடகங்களிடமும் பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது: "ஜி20 நாடுகளின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுள்ளது. சர்வதேச அரங்கில் அதன் முக்கியத்துவம் மேலும் வளரும். அதேபோல், இந்திய-அமெரிக்க உறவும் வளரும். இந்தியாவில் இருந்து அமெரிக்கா வருபவர்களுக்கான விசா காத்திருப்புக் காலத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளை அமெரிக்க வெளியுறவுத் துறை மேற்கொண்டு வருகிறது'' எனத் தெரிவித்தார்.

முன்னதாக, தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்க வெளியுறவுத்துறை வெளியிட்ட ட்விட்டர் பதிவில், "புதிய கண்டுபிடிப்புகள் மூலமும், அதிகரித்து வரும் வாய்ப்புகள் மூலமும் இந்தியாவும் அமெரிக்காவும் பலன்களைப் பெற்று வருகின்றன. அமெரிக்காவில் உள்ள இந்திய கண்டுபிடிப்பாளர்கள், கல்வியாளர்கள், மருத்துவர்கள், தொழிலதிபர்கள், சமூக தலைவர்கள் ஆகியோரின் எதிர்பார்ப்புகள் குறித்து நாங்கள் கேட்டு வருகிறோம்'' எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.


வெளியில் செல்லும் போது முகக் கவசம் அணிந்து செல்வோம்
கொடிய கொரானாவிலிருந்து பாதுகாப்புப் பெறுவோம்
கல்முனை NET
kalmunainet.com

Published by Kalmunainet Media Network (Pvt) Ltd. at Boundary Road, Kalmunai 01. on Tuesday, 28. 02. 2023